ஓம்

"ஒன்றுபட்டா லுண்டு வாழ்வே — நம்மில், ஒற்றுமை நீங்கில் அனைவர்க்குந் தாழ்வே."

# ஈழகேசரி

சிறந்த தேசியத் தமிழ் வார வெளியீடு.

(ஞாயிற்றுக்கிழமைதோறும் வெளிவருவது)

"நன்மை கடைப்பிடி" | "நயனொடு நன்றி புரிந்த பயனுடையார், பண்பு பாராட்டு முலகு" | "நாடோப்பன செய்"

வாழ்க அந்தணர் வானவ ரானினம், வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக, ஆழ்க தீயதெல் லாமர னாமமே, சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

தொகுதி—கூ. } யாழ்ப்பாணம், சுன்னாகம்: தாதுவூ சித்திரைமீ எவ (19-4-36) ஞாயிற்றுக்கிழமை { பகுதி—நகூ.

## தோத்திரம்

கானகம் இலங்குபுலி பசுவொடு குலாவும்நின் கண்காண மதயா னைநீ
கைகாட்ட வுங்கையால் நெகிடிக் கெனப்பெரிய கட்டைமிக வேந்தி வருமே
போனகம் அமைந்ததென அக்காம தேனுநின் பொன்னடியில் நின்று சொலுமே
புவிராசர் கவிராசர் தவராச னென்றுனைப் போற்றிசய போற்றி யென்பார்
ஞானகரு ணைகர முகங்கண்ட போதிலே நவநாத சித்தர் களுமுன்
நட்பினை விரும்புவார் சுகர்வாம தேவர்முதல் ஞானிகளும் உனைமெச் சுவார்
வானகமு மண்ணகமும் வந்தெதிர் வணங்கிடுமுன் மகிமையது சொல்ல எளிதோ
மந்த்ரகுரு வேயோக தந்த்ரகுரு வேமூலன் மரபில்வரு மௌன குருவே.

—தாயுமான சுவாமிகள்.

# புது யுகக் கும்மி.

(சுத்தானந்தபாரதி)

ஆற்றல் பிறந்தது! வாட்ட மொழிக்துநல்
லாரமு தாவியில் ஊறுதடீ!
போற்றி யரவிந்தன் புண்ணிய நாமம்
புதுயுகக் கும்மி யடித்திடுவோம்!

விண்ணொளிர் மெய்யறி வின்பம் விளங்கிடும்
விக்ஞான ஜோதி வளநாடு
கண்ணிற் கருத்திற் கனிவிருக் தூட்டுதக்
காட்சியைப் பாடிக்கொண் டாடிடுவோம்!

எல்லையி லின்பத் திருநாடு நலம்
எல்லாங்கை கொண்டு தருநாடு!
சொல்லெல்லாம் வேதச் சுவைநாடு மாந்தர்
தொட்டது பொன்னுஞ் சுபநாடு!

இந்திர ரேநர காரண தீரர்
இயல்பினி லேபரி பூரணர்கள்
சுந்தர சக்திக் கனல்வீசுஞ் சுடர்த்
தோகையரே யெழில் வாகையரே!

யோகத்திலே சுத்த போகத்திலே மதி
யூகத்திலே தெய்வ தாகத்திலே,
ஏகத்திலே ஸம பாகத்திலே யிரு
தேகத்தி லின்னுயி ரொன்றானர்!

அன்பலை வீசி யருள்வினை யாடும்
அகண்ட ஸமரஸப் பாற்கடலில்,
பொன்மயச் சின்மயத் தன்மயா னந்தர்கள்
பொங்கிப் பொலிவதைப் பாருங்கடி!

சாத்திரங் கோத்திர மாத்திரைச் சண்டைகள்
சாதி மதப்பிடி வாதங்களும்
மூத்த முழுப்பொய்கள், மூடப் பழக்கங்கள்
மூய்ந்தன கட்டுகள் ஓய்ந்தனவே!

பாழுங் கனவென வாழ்வை வெறுத்திடும்
பாசாங்கு வேஷங்க ளில்லையடி!
ஆளும் பராசக்தி யாட லுலகெங்கும்
அம்புதச் சிற்பரஞ் சோலையடி!

உள்ளன்பி லீசனோ டொன்னர் உல
கோங்கி வளர இரண்டானர்
செல்வத் திருவருள் மன்றினிலே யோக
சித்தப் புலவர் பயின்றார்கள்.

ஆடிடுவார் அர சாண்டிடு வார்கள்;
அனைவர்க்கு மேநலந் தேடிடுவார்;
பாடிடுவார் சுகங் கூடிடு வார்கள்;
பராசக்தி யேவலிற் பாய்ந்திடுவார்.

உரைகளி லுண்மை யுழைப்பினிற் றிண்மை
யுருகு மனத்தி லருட்சோதி
கரையற் றழகு விரிந்திடும் வாழ்விற்
கடவுளைக் கண்ட புதுச்சாதி!

எண்ணருஞ் செல்வத் தெழிலுடையா ரின்ப
மெங்கிலுங் காணு மெழிலுடையார்
விண்ணவர் சங்கம் விளங்கிடுவார் என்றும்
வெற்றி பெறுகெனக் கொட்டிடுவோம்!

அப்பாஎன் எய்ப்பில்வைப்பே ஆற்றுகிலேன் போற்றியென்று, செப்புவதல் லால்வேறென் செய்வேன் பராபரமே.

# "ஈழகேசரி தாது ஆண்டுமடல்"

பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | ஐந்திணை ஆராய்ச்சி (பிரமஸ்ரீ சி. கணேசஐயர் | 1—4 |
| 2. | கீரிமலை நீரூற்று (திரு. நம. சிவப்பிரகாசம்) | 4 |
| 3. | நாகர் வரலாறு முதலியார் (திரு. செ. இராசநாயகம்) | 4—14 |
| 4. | விடுகவிகள் | 14 |
| 5 | மடல் (திரு. ச. பொன்னம்பலபிள்ளை) | 15—16 |
| 6. | நாமகள் தசாங்கம் (திரு. க. சோமசுந்தரப்புலவர்) | 17 |
| 7. | அருள்வேட்டல் (திரு. தேசிகவிநாயகம்பிள்ளை) | 18 |
| 8. | வண்டல்கள்மேல் அமர்ந்திருப்போர் (சங். டக்றர் ஐசக் தம்பையா) | 19 |
| 9. | ஈழகேசரி வாழ்த்துப்பாக்கள் (திரு, தா. சுவாமிநாதன்) | 20 |
| 10. | ஆதிமருதி [ஒரு நாடகம்] (பிரம்மஸ்ரீ நவநீத கிருஷ்ணபாரதி) | 21—32 |
| 11. | முக்கணனருளிய மக்கண்மொழிமாண்பு (பிரம்மஸ்ரீ வ. மு. இரத்திநேசுவரையர்) | 31—32 |
| 12. | கவிஞனே சிறந்த ஓவியன் (கணேசதாசன்) | 33—36 |
| 13. | மாமூலனார் (சிவங். கருணாலயபாண்டியப்புலவர்) | 37—53 |
| 14. | பண்டிதர் ஜவஹர்லால்நேரு (K. A.) | 54—56 |
| 15. | ஜப்பானிய தாய்மார் மணமகளுக்குக் கூறும் நீதி வாக்கிய மொழிபெயர்ப்புப் பாடல் (தமிழ்ப் பண்டிதர் திரு. நெ. வை. செல்லையா) | 57 |
| 16. | தேவியின்வரம் (நவாலியூர் சத்தியநாதன்) | 58—60 |
| 17. | தமிழ்நாடு விழைவுறூஉந் தகைசால் மெல்லியல் (ஸ்ரீமதி வேதநாயகி அம்மையார்) | 61—66 |
| 18. | ஆசிரியர் தொல்காப்பியனார் (வித்துவான் க. முருகேசபிள்ளை) | 67 -68 |
| 19. | இலங்கை இந்துக்களும் அவர்கள் எதிர்காலமும் (Dr. W. பாலேந்திரா) | 69—72 |
| 20 | மாயக்குதிரை (ஸ்ரீமத். பண்டித வ. சு. இராஜ ஐயனார் | 73—88 |
| 21. | பிரஹ்மஸ்ரீ செந்திநாதையர் அவர்களின் சரித்திரச் சுருக்கம் | 89—94 |
| 22. | அன்னியமார்க்கமா? (Rev. S. குலேந்திரன் B. A. B. D.) | 95—96 |
| 23. | இவன் யார்? (திரு. S. நல்லையா) | 97—100 |
| 24. | தமிழகச்சிறப்பு (ஸ்ரீமதி R. S. ராஜலட்சுமி | 100 |
| 25. | சுதந்திரக்கொடியை எப்போதும் பறக்கச்செய்க | 100 A |
| 26. | மனநிம்மதி ("அழகு") | 101—103 |
| 27. | மிகுந்தலைச் சந்நியாசி ("சுயா") | 104—106 |
| 28. | விகட வெண்பா | 106 |
| 29 | வேட்டுவேர் (திரு. குல. சபாநாதன்) | 107—112 |
| 30. | தமிழரும் அரசியற் றிருத்தங்களும் (அத்துவக் காத்து திரு. நா. குமாரசிங்கம்) | 113—124 |
| 31. | இராமகிருஷ்ண பரமஹம்ஸதேவர் நூற்றாண்டு நிறைவு (திரு. மா. பீதாம்பரன்) | 125—126 |
| 32- | எறிந்த மலர் ("தேனீ") | 127—128 |
| 33. | ஸ்ரீ க. முத்துக்குமாரு வைத்தியர் ஞாபகார்த்தக் கூற்று (ஸ்ரீ வை. இராமநாதன) | 128—131 |
| 34. | நீர் செய்யவேண்டியன, கூதிர்காலம் (பண்டிதர் திரு. மு.நல்லதம்பி) | 132—134 |
| 35. | இராசமாளிகையில் கீர்த்திபெற்ற இருகோமாளிகள் ("நவீனன்") | 135—136 |


படங்கள்


1. நடராஜர் நர்ன்குவர்ணம் (பஞ்சகிருத்தியம்)
2. அரசாங்கசபைத் தலைவர்
3. எட்டாவது எற்வேட் அரசர்
4. புத்த பகவான் சிலை
5. அகத்தியமுனிவர் சிலை
6. கானவன் கள்ளுண்டு களித்தல்
7. கொடிச்சி கூந்தலைக் கோதிக்கொண்டிருத்தல் } சித்திரம்
8. தினைப்புனத்தில் யானை
9. ஸ்ரீமத் அ. குமாரசுவாமிப்புலவர்
10. வித்துவசிரோமணி ந. ச. பொன்னம்பலபிள்ளை
11. பண்டிதர் ஜவஹர்லால்நேரு
12. திரு முத்துக்குமாரு சிதம்பரப்பிள்ளை
13. வரகவி சுப்பிரமணிய பாரதியார்
14. சேர் பொன். இராமநாதன் (யோகநிட்டையிலிருக்கும்காட்சி]
15. தேவநம்பியதீசனும் மிகுந்தனும் சந்திக்கும்காட்சி
16. யாழ்ப்பாணம் நகரசங்க மண்டபம்
17. பருத்தித்துறைத் துறைமுகம்
18. கண்டியிலுள்ள முற்றவெளி
19. பேராதெனியாப் பூந்தோட்டம்
20. இலங்கையிலுள்ள வேடுவ ஜாதியார்
21. றொடியா ஜாதியார்
22. மந்திரா தேவி
23. திருக்கோணேஸ்வரம்
24. பிரம்மஸ்ரீ செந்திநாதையர்
25. யானைக்குட்டிச் சுவாமியார்
26. திருக்கேதீச்சுரம்
27. காங்கேசன்துறை தீபஸ்தம்பம்
28. சிகிரியா
29. சுபாஸ் சந்திரபோஸ்
30. ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்ஸதேவர்
31. ஸ்ரீ விவேகானந்த சுவாமிகள்
32. வைத்தியர் க. முத்துக்குமாரு

1. முதலியார் செ. இராசநாயகம்
2. வித்துவான் ச. பொன்னம்பலபிள்ளை
3. நவநீத கிருஷ்ண பாரதியார்
4. பண்டித வ. சு. இராஜஐயனார்
5. அத்துவக்காத்து நா. குமாரசிங்கம்
6. பண்டிதர் மு. நல்லதம்பி


**விலை சதம் 50.** (தபாற்செலவு சதம் 14) **மலாய் நாடு காசு 50.** (தபாற்செலவு காசு 20)

அதிபர், "ஈழகேசரி", சுன்னாகம்

## ஞாபகவிழாக்கொண்டாட்டம்

புதுச்சேரி "வித்தகம்" பத்திராதிபர் திருவாளர் நா. நாகரத்தினமவர்கள் சகோதரி திருமதி மாரிமுத்தம்மையார் எம்பெருமானுடைய திரோதானத் திருவடியில் திருத்தக ஒடுங்கிய ஞாபக மகோந்நத விழா மிகவும் விரிவாகவும் விமரிசையாகவும் பன்னூற்றுக்கணக்கான மக்கள் குழும இனிது நடைபெற்றது.

30-3-36 திருவாதிரை நன்னாளில் அதிகாலையில் மங்கலதாரியமோலிட்ப, அருட்பாவோசை பொலிய ஸ்ரீமணக்குள விநாயகப்பெருமானின் திருக்கோயிலெய்தி அபிஷேக பெருமானின் திருக்கோயிலெய்தி அபிஷேக விசேஷ தீபாராதனைகள் நடத்தப்பெற்றன. ஆங்கே, "வித்தகம்" போசிரியர், யாழ்ப்பாணத்துத் தென்கோவை தமிழ்ப்பண்டித ஸ்ரீமார். ச. கந்தையபிள்ளையவர்களால் இயற்றப்பெற்ற "ஸ்ரீமணக்குள விநாயகர் பதிகம்" சந்நிதியில் ஓதப்பெற்று யாவருக்கும் வழக்கப்பட்டது. அப்பால், மங்கல வாத்தியமும் தேவாரத் திருக்கூட்டத்தினர் தமிழுறை முழக்கமும் நிறைந்து விம்ம, அபிஷேக ஆராதனைத் திரவியங்களை அணியணியாக அன்பர்கள் தாங்கிச் சபாதி நிலையஞ் சார்ந்து முறைப்படி அபிஷேக தீபாராதன புஷ்பாஞ்சலிகள் முற்றி மாரிமுத்தம்மையார் பதிகம் படித்து அன்பர்களுக்கு அளிக்கப்பெற்றது. விபூதிப்பிரசாதமீந்து கூழ் விநியோகமும் செயப்பெற்றது. அப்பால் கிருகத்திலும் விசேஷ ஆராதனைகள் புரிந்து கூழ் பன்னூற்றுக்கணக்கான மக்களுக்கு நல்கப்பட்டது.

31-3-36 மாலை 6 மணிக்கு ஷை "வித்தகம்" அதிபர் திரு. நா. நாகரத்தினமவர்கள் ஆதரவால் யாழ்ப்பாணம் தமிழ்ப்பண்டிதர் பிரமஸ்ரீ வ. மு. இரத்திநேஸ்வரையரவர்களால் "அடியார்பெருமை" என்னும் அரிய பொருள் பொதுளிய இனிய பிரசங்கம் நடைபெற்றது. அதுகாலை பல பிரமுகர்கள் விஜயஞ்செய்து பிரசங்காமிர்தமருந்தி மகிழ்ந்தனர். எல்லாவற்றானும் விழா வைபவம் செவ்விது சிரத்தையுடன் சிறப்பாக நடைபெற்றமை பாராட்டற்பாலதாம்.

1-4-36 நிருபர்.

## சிறுத்தொண்டன் நாடகம்.

சிங்கப்பூர் கப்பப்பாறு என்னுமிடத்தில் உத்திபோகம் காரணம்ப் வதியும் நம் யாழ்ப்பாண மக்களினது பன்னிரண்டு வயதிற்குட்பட்ட செல்வச் சிறுமியர்களால் ஆங்கிலம (5-4-36) ஞாயிற்றுக்கிழமை இந்நகர் விக்டோரியா கூத்துமேடையில் சிறுத்தொண்டனென்னும் சிவனடியாரது திவ்யசரிதை கண்டோருள்ளம் களிப்பெய்துமாறு நடித்துக் காண்பிக்கப்பட்டது.

இதில் சம்பந்தப்பட்ட எல்லாச் சிறுமிகளும் தங்கள் ஆற்றலுக்கதிகமாய் நடித்துக் காண்பித்தார்களென்று கூறினும் மிகையாகாது. இன்னும் சீராளனாக நடிக்கும் சுமார் ஆறு வ[illegible]சுள்ள சிறுமியின் திறமை குறிப்பிடத்தக்கதேயாகும். ஆனால் இப்பிள்ளைகளுக்காக இச்சரிதையைத் தெரிந்தெடுத்து அவரவர்கள் தன்மைகேற்ப இன்னார்க்கு இன்னவேஷமென்று வகுத்தவர்களுப் பிள்ளைகளின் பெற்றோர் மிகவும் கடமைப்பட்டவர்களாவார்கள். இப்பாலிகைகள் இந்நாடகத்தை வேறிடங்களிலும் நடிப்பார்களென அறியலானேன். அவ்விடங்களிலுள்ளவர்கள் தவறாது கண்ணுற்றுவகைகொள்வார்களென்பதென் அபிப்பிராயம். மறுமுறை நடிக்கும்போது நாடகத்திற்குத் தொடர்பிலாததிகமாய் பாடும் பாக்களில் சிலதைக் குறைக்கப் பெற்றோர் தகுந்த ஏற்பாடு செய்வார்களென நம்புகிறேன்.

இச்செல்விகளின் க்ஷேமத்திற்கும் சங்கீத வளர்ச்சிக்கும் கருணை பாலிக்குமாறு எம் இறைவனடி போற்றுதும். —கடித

நெஞ்சிற் றுறவார் துறந்தார்போல் வஞ்சித்து, வாழ்வாரின் வன்கணாரில்.

**பத்திரக்கிரயம்**

இலங்கை, இந்தியா,
பர்மா ரூபா 4.
மலாய்நாட்டுக்கு வெள்ளி 4.
சீவியசந்தா ரூபா 40.
தனிப்பிரதி சதம் 5.
இந்தியாவுக்கு ,, அணா 1.
மலாய்நாட்டுக்கு ,, காசு 7.

# ஈழகேசரி

**விளம்பரவிகிதம்**

முதன்முறைக்கு
ஒருகலம் ரூபா 7-00
,, அரைக்கலம் ,, 4-00
,, காற்கலம் ,, 2-50
அரசியல்சம்பந்தமான விளம்பரங்களுக்குச் சலார் வேறு.

தொகுதி—சூ. } யாழ்ப்பாணம், சுன்னாகம்: தாதுஹூ சித்திரைமீ ௭ ௨ (19-4-36) ஞாயிற்றுக்கிழமை { பகுதி—௩௧

## இந்திய தேசிய மகாசபை

பண்டித ஜவஹர்லால்நேரு அவர்களின்
தலைமைப் பேருரை

சகோதரத் தொண்டர்களே!

**பல** வருடங்களின் பின் மறுபடியும் நான் இந்த உயரிய ஸ்தானத்தினின்று உங்களை நோக்கும் பாக்கியம் பெற்றேன். நாங்கள் அடைந்த துயரங்களுக்கும் கஷ்டங்களுக்கும் அளவின்று. சுதந்தரப் போரை நடத்துங்கால் உங்களுடன் சேர்ந்து நானும் ஒரு போர்வீரனாகநின்று தொண்டாற்றும் பெருமையை அடைந்தேன். அது எனக்கு பெரும் சந்தோஷத்தை அளிக்கின்றது. நம்முடன் ஒருங்குநின்று திடமாகத் தொண்டாற்றிய எத்தனையோ வீரர்கள் காலஞ்சென்றுவிட்டனர். இடைவிடாது தொண்டாற்றிய அவர்கள் ஆறுதல் அடைவதே முறை. ஆனால் பெரிய பொறுப்புக்களை ஏற்றுள்ள நாங்கள் இப்போது செய்யவேண்டியன யாதென்று முடிவுசெய்வது மிக அவசியமாகும். இணையில்லாத் தியாகங்களை எத்தனையோ பெருமக்கள் நாட்டிற்காகச் செய்துவிட்டுச் சென்றுவிட்டனர். அவர்கள் தொடங்கிய தொண்டுகளைச் செய்துமுடிக்காவிடின் நாம் தேசத்துரோகிகளாவோம். கோடிக்கணக்கான சனங்கள் எம்மையே நோக்கி நிற்கின்றனர். இத்தருணத்தில் பின்வாங்குவதா?

### நோக்கம் உயரியதாகுக

சென்ற சில வருடங்களாக எமது நாடு அடைந்துள்ள நிலையைக் கண்டு சிலர் சோர்வடையலாம். இதை நினைத்து நாம் துயரடைவதா? சென்றகால நிகழ்கால சம்பவங்களிலிருந்தே வருங்கால நன்மைகள் யாதென்பதை அறியக்கூடும். உண்மைகளை நாடி நாம் நீதியான வழியில்நின்று தொண்டாற்றினோம். இவ்வளவு கஷ்டங்கள் ஏற்படும் இந்நாட்டில் எத்தனையோ அற்புதங்கள் முன் நடந்துள்ளன. கஷ்டங்களை அனுபவியாது நன்மைகளை அடையவியலாது. நோக்கம் உயரியதாயிருக்கும் வரையும் சிறிய தோல்விகளைக் கண்டு நாம் மனவிழுக்காடு அடையவேண்டியதில்லை. தோல்விகள்தான் பெரிய வெற்றிகளை அடைதற்கு உதவியாகின்றன. ஒருவராயினும், ஒரு சாதியாராயினும் தம்மைத்தான் ஆராய்ந்து நுணுகி நோக்கின் அவர் நேரிய வழியே செல்லக்கூடியவராவர். என் செய்வதென மனவெறுப்புடன் இணங்குவதுபோல் ஆலோசியாது தனது பெலனில் நம்பிக்கை கொள்வதும் பிழையாகும். உயரிய நோக்கங்களைக் கைவிட்டு பிழையானவழிகளில் சென்றாலன்றித் தோல்வி ஒருபோதும்வந்து நம்மை அடையா.

எமது நாட்டின் சரித்திரத்தை துவேஷமும் ஆர்வமுமின்றி நடுநோக்கிப் பார்ப்பதும் அவசியம். எமது நாட்டின் விருத்தியை நாடி நாங்கள் செய்த தொண்டுகளையும், மற்றவர்கள் செய்த தொண்டுகளையும் ஆய்ந்து நோக்கி இப்போது நமது நிலை யாதென்பதையும் அவதானித்துப் பார்க்கவேண்டும்.

### புதிய கொள்கைகள்.

இற்றைக்கு 16 வருடங்கட்கு முன் மகாத்மாகாந்தி யடிகளின் தலைமையின்கீழ் எமது அரசியல் வாழ்விலும் நோக்கிலும் அநேக மாற்றங்கள் ஏற்பட்டன. அப்போது புதிய கொள்கைகளைக் கண்டு அச்சமடைந்து அநேகபழைய தலைவர்கள் காங்கிரஸ் சபையை விட்டு விலகினர். ஆனால் அநேக இளைஞரோ புதிய கொள்கைகளையும் அரசியல் முறைகளையும் அனுசரித்தமையால் அவை மறையாது நாம் முன்னணியில் நின்று போர்செய்யக் கூடியதாயிற்று. எமது மனமும் சுதந்தரவேட்கை யுடையதாயது.

### எமது நிலை

1914-ம் வருடம் ஏற்பட்ட ஐரோப்பிய மகா யுத்தத்தின்பயனாக அடைந்துள்ள மாறுதல்களோ பல. ஐரோப்பாவிலும் ஆசியாவிலும் எல்லாநாடுகளிலும் பொதுவாகச் சுதந்தர உணர்ச்சி தோன்றியுளது. அதுவுமன்றிப் பொருளாதாரநிலை சீர்குறைந்ததும் எங்கும் குழப்படிகள் ஏற்படலாயின. ருஷியா தவிர்ந்த எல்லாநாடுகளிலும் கஷ்டங்கள் பல்வேறுவழியில் ஏற்பட்டன. புதிய ருஷிய அரசினரின் பரிபாலனத்தில் அந்நாட்டில் ஏற்பட்ட விருத்தி பெரிதும் போற்றப்படவேண்டியதே. உலகில் இரண்டுவிதமான பொருளாதார அரசியல் முறைகள் எழுந்தன. இவைகள் இரண்டிற்கும் உண்மையில் ஒற்றுமை கிடையாது. உலகம்முழுவதையும் தம்முள் கொண்டுவரவேண்டும் என்றும் ஏதேச்சாதிகாரத்தை நாட்டவேண்டுமென்றும் எண்ணுமரசியல்வாதிகள் சிலர், தேசியவாதிகளாய் அபேதவாதக்கொள்கையையுடையார் சிலர். இந்தியாவின் விடுதலையை நாடி யுழைக்கும் நமது நிலை யாது? ஏகாதிபத்தியத்தின்விருத்தியையே பொதுவாகநோக்கிநிற்கும் அரசியல் முறையை இந்தியர் நாடார். உலகத்தில் பழையதாகத் தோன்றும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கெதிராக நாம்போர் புரியவேண்டியதாகிறது. இந்தியருடைய தேசீய வாதத்திற்கும் பிரிட்டிஷாருடைய ஏகாதிபத்திய அரசியல்முறைக்கும் ஒருபோதும் ஒற்றுமை ஏற்படாது. ஏகாதிபத்தியத்துள் நாம் அடங்கியிருப்பின் நாம் எப்போதும் தாழ்ந்த நிலையிலேயேயிருக்கவேண்டும். அப்போது ஏழைச் சனங்கள் நிலை மிக அலங்கோலத்தையடையும். எமது நாட்டில் காணப்படும் வகுப்புத் துவேஷங்களும் பிரிவுகளும் ஒருபோதும் நீங்காவாகும். இப்போது உலகின் எந்தநாட்டை நோக்கினும் அங்கே பணக்காரரும், மற்றையோரைத் தம்முள் அடக்கவேண்டுமென்னும் எண்ணமுடையோரும் அதிகாரம் இழந்து கஷ்டமடைவதைக் காணலாம். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியமும் சீர்குலைந்துவருவதை நாம் கண்ணாரக் காண்கின்றோம். பிரிட்டிஷ் ஏகாதிபத்திய அரசியல்முறை அனுட்டானத்தி லிருக்கும்வரையும் இந்தியாவின் பொருளாதாரநிலையும் சீரடையாது. இந்தியரைப் பல்லாண்டுகளாகப் பீடித்து வருத்தும் வறுமையும் நீங்காது. இந்தியாவில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியக் கொள்கைகள் யாருடைய துணை பெற்று நிலைபெறுகின்றன? தேசத்துரோகிகளாகும் ஒற்றர்கள்—காரியத்தைக் கெடுக்கவந்து கலாதிகள் கிளப்பும் சத்துராதிகள் என்போரே அரை உயிரிலிருக்கும் ஏகாதிபத்தியத்தைத் தாங்கிநிற்கின்றனர். இவ்வித ஏகாதிபத்தியத்தை நிலைக்கச்செய்வதற்கு அரசினர் கையாளும் முறைகளும் இங்கே நோக்கப்படலாம். நியாயங்கூற வியலாமையால் பொலிஸ்காரரின் இடி தடி உபயோகப்படுத்தப்படுகிறது. மறியற்கூடங்கள் தொண்டர்களின் வாசஸ்தலங்களாகின்றன. சிற்சிலபோது துப்பாக்கிப் பிரயோகமும் வாள் விளையாட்டும் நடக்கின்றன. இவ்வாறு நம்மையாளும் பிரிட்டிஷார் ஏகாதிபத்தியத்தைக் காப்பாற்றிக் கொள்வதற்குக் கையாளும் முறைகள் எவ்வளவு அலங்கோலமானவையாகின்றன. பிரிட்டிஷார் ஒருபுறமாக, நம் நாட்டவர் சிலர் (இந்தியர்) பிரிட்டிஷாரிலும் பார்க்க ஏகாதிபத்திய வாஞ்சையுடையராய் தாம் அவ் வேகாதிபத்தியத்தைத் தாங்கிநிற்பதாகக் கருதுகின்றனர். இவ்வாறாக இந்தியாவின் உண்மையான முன்னேற்றத்துக்கு மாறாக நிற்கு மிவர்கள், தேசீய மகாசபையாகும் காங்கிரஸ்சபையின் ஆதிக்கத்தைக்கண்டு மிகுந்த துவேஷம அடைகின்றனர். மனநிலையின் திடமறியாத இவர்கள் சந்தேகங்கொண்டு காங்கிரஸ்சபையில் அச்சங்கொள்கின்றனர். ஒன்றை யின்னொன்றாகப் பிழையாகவிளங்கித் தேசத்தொண்டர்கள்மீது சந்தேகங்கொண்டு அவர்களை நீதிமன்றத்தில்தானும் விசாரணைசெய்யாது சிறையில் வைக்கின்றனர்.


[முடிசூடாமன்னன் பண்டித ஜவஹர்லால் நேரு]

ஆகையால் நாம் விடுதலையடையுங் காலம் எட்டத்திலில்லை என்பதையும் நான் உறுதியாகக் கூறுகிறேன்.

### என்ன சுதந்திரந்தானுண்டு?

சிலவிஷயங்களை நான் சொல்ல விரும்புகிறேன். அவைகளை நான் மிகப் பிரதானமானவையாகக் கவனிக்கிறேன். இந்தியர் சாதாரண சுதந்தரங்களை இழந்துவிட்டார்களென்பது எனது மனதைப் புண்படுத்துகிறது. புதிய அடக்குமுறைச் சட்டங்களை உண்டாக்கி எத்

(தொடர்ச்சி அடுத்த பக்கம் பார்க்க)

துறந்தவர்போல் வஞ்சித்து வாழ்பவரினுங் கொடியவரில்லை.

# இந்திய தேசிய மகாசபை

(முன்பக்கத் தொடர்ச்சி)

தலை சங்கங்களை நசித்துவிட்டனர். எத்தனையோ பத்திரிகையைத் தொலைத்து விட்டனர். எத்தனையோ தொண்டர்களைச் சிறையில் வைத்து விட்டனர். இவ்வித அரசியல் நிலை பெறுவதற்கு எவ்வித நியாயமுங் கூறவியலாதாகின்றது. இவ்விஷயங்களை நான் எப்படி அங்கீகரிப்பேன். அரசியல் எவ்வாறு நடத்தப்படுகின்றதென்பதைச் சமீபத்தில் சுபாஸ் சந்திரவஸு அவர்கட்கு நடந்தனவற்றிலிருந்து நாம் அறிந்துகொள்ளலாம். அவரைப்பற்றியும் அவருக்கெதிராகக் கொண்டுவரப்பட்ட போலிச் சாட்டுகளைப்பற்றியும் நாம் அறிவோம். இச்சாட்டுகளில் ஏதாவது உண்மை இருப்பினும் இவ்விதம் இவர் கஷ்டப்படுத்தப்படுதலை நாம் எப்படி அங்கீகரிப்போம்? ஜெனீவாவில் நான் வசிக்கும்போது இவ்விஷயங்களைக்குறித்து என் அபிப்பிராயத்தை உசாவினர். எனது அபிப்பிராயத்தால் சிறைவாசமே ஏற்படுவதாகவிருக்க நான் அதைக் கூற மிகவும் வியாகுலமடைந்தேன். சந்திரவஸு அவர்கள் அதிகம் கஷ்டத்தை அனுபவித்துவிட்டனர். அவர்க்குக் கஷ்டத்தை வருவிக்கும் புத்திமதியை நான் கூறுதல் நியாயமாகுமா? ஆரம்பத்தில் இந்தியாவுக்குத் திரும்புவதைப் பின்போடும்படி நான் சொன்னேன். இவ்வித புத்தி சொல்வது உண்மைக்கு விரோதம் என எண்ணிப் பின் வேறுவிதமாக அபிப்பிராயங்கூறினேன். இந்தியாவுக்குத் திரும்பிவருவதே முறையென நான் நிருபமூலமாக அறிவித்தேன். எனது நிருபம் கிடைக்குமுன் அவர் திரும்பிவிட்டனர்.

### அராஜகம்

இந்தியாவில் அராஜகக்கிளர்ச்சியுளதென்றும் அதை யடக்கவேண்டுமென்றும் அரசினர் மிக ஆத்திரங் காட்டுகின்றனர். வங்காளத்திலேயே இக்கட்சி தலைகாட்டி நிற்கின்றதென்றும் அதை எவ்விதத்திலும் அடக்கவேண்டுமென்றும் அரசினர் கங்கணங்கட்டி நிற்கின்றனர். உண்மையில் அவ்வித கிளர்ச்சி அங்கே இப்போது கிடையாது. காங்கிரஸ் மகாசபை அஹிம்சையைப் பெரிதும்சார்ந்துநின்று தொண்டாற்றிய காரணம்பற்றி இளைஞர்கள் யாவரும் இச்சபையின் நோக்கத்தையே கைக்கொண்டு ஒழுகலாயினர். இப்போது எங்கேயாவது பலாத்காரம் அராஜகம் காணப்படின் அவை அரசினரின் கொள்கைகளாலேயே எழுந்தனவாகும். அராஜகமிருந்தாலென்ன, இல்லாவிடிலென்ன, தற்போது மிதுனபுரி (Midunapore) முதலிய இடங்களில் நடத்தப்படும் அரசியல் முறைகள் முற்றாகக் கண்டிக்கப்படவேண்டியனவே. இம்முறையையே அரசினர் எல்லைப்புற மாகாணத்திலும் அனுட்டானத்துக்குக் கொணர்ந்து அங்கே பொது மக்களின் தலைவரும் தேசத்தொண்டருமாகிய அப்துல்கபூர்கான் என்னும் எல்லைப்புறக் காந்தியைச் சிறையில் வைத்தனர்.

### இப்போ செய்யவேண்டியன

விஷயங்கள் இவ்வாறாக நாம் இப்போது செய்யவேண்டியன யாவை என்பதும் முடிவுசெய்யப் படவேண்டும். பூரண சுதந்திரத்தைப் பெறுதற்கு நம் நாட்டவர் யாவரும் ஒற்றுமையாக நின்று தொண்டாற்றக்கூடிய விதமாக வழிகளை அனுட்டிக்கவேண்டும். ஒற்றுமை! ஒற்றுமை!! என்ற பேச்சு எங்கும் நிகழ்கின்றது. யாவர்க்கிடையில்? உயர்ந்த வகுப்பினரே தமக்கிடையில் ஒற்றுமை வேண்டுமெனப் பேசிக்கொள்கின்றனர். ஏழை மக்களாகும் பொதுசனங்களை எவரும் கவனிப்பதைக் காணேம். ஆனால் காங்கிரஸ் மகாசபையின் நோக்கம் அதுவன்று. அப்படியாயின் காங்கிரஸ் மகாசபை சனங்கள் யாவர்க்கும் ஏற்ற பொது ஸ்தாபனம் என்றபேர் இல்லாது போய்விடும். ஏகாதிபத்திய அரசியல்முறை எப்படியாவது எதிர்க்கப்பட வேண்டும். அதற்கு உறுதுணையாகநிற்கவேண்டியவர் இந்தியப் பொதுமக்களே. சர்வதேசசங்கங்களையும்சாதியினரையும் ஒருங்கு நோக்கி நான் பலவற்றைக் கூறியதையும், இந்தியாவின் குறைகளை நான் விசேஷமாக ஏன் எடுத்துக் காட்டவில்லையென்றும் சிலர் ஆச்சரியமடையலாம். ஒருபோது மிக ஆத்திரங் கொள்ளலாம். ஆனால் நம் நாட்டின் நிலைமையை உலகின் மற்றைய நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டுமென்பதே எனது முடிபான நம்பிக்கையாகும். அல்லாவிடின் நாம் பிழையான அபிப்பிராயங்களை யுடையராக வீணாக அலையவேண்டி வரும். உலகில் இப்போது நடக்கும் மாற்றங்களைப் பாருங்கள். அடிமைகளாக இருக்கும் சாதியினர் இப்போது சுதந்திர தாகங்கொண்டு போராடுகின்றனர். ஏகாதிபத்தியத்தை விருத்திசெய்ய வேண்டுமென்னும் நோக்குடையார் சிறு சாதியினரை நசிக்கப்பார்க்கின்றனர், யுத்தமேகம் எங்குங் காணப்படுகின்றன. இத்தாலியர் ஏகாதிபத்திய வாஞ்சையால் பீடிக்கப்பட்டு, தைரியம்நிறைந்த அபிசீனியரை ஆகாயக் கப்பலிலிருந்து குண்டுபோட்டுக் கொலைசெய்கின்றனர். வடசீனாவில் யப்பானியரின் ஏகாதிபத்திய வாஞ்சை நடனமாடுகின்றது. ஆனால் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியமோ மற்றைய நாட்டினர், வாஞ்சை காரணமாகப் பிழைசெய்வதைக் கண்டிக்கின்றது: தானோ இந்தியாவிலும் எல்லைப்புறத்திலும் ஏகாதிபத்தியத்தை நிலைபெறச்செய்ய மகா பெரிய முயற்சிகள் செய்கின்றது. இவ்விஷயங்களைச்சரித்திரபூர்வமாக ஆராய்ந்துபார்த்தால் உண்மை விளங்கும். அப்போதுதான் உலகநிலையை நன்கறிந்து அதற்கியைய நம் வாழ்க்கையை நிதானப்படுத்திக் கொள்ளலாம்.

### இக்குறைகளை நிவிர்த்திசெய்ய!

இவ்விதமாக ஏற்பட்டுள்ள பல்வேறு கஷ்டங்கட்கும் ஒரேயொரு மருந்துளது. அது சர்வசன சமத்துவமே (Socialism). அதாவது சனங்கள் தமது வாழ்க்கையில்மாத்திரம் சமத்துவம் அடைவதென்பதன்று. பொருளாதார, சாஸ்திர சம்பந்தப்பட்ட விஷயங்களில் யாவரும் ஒரேவித நன்மையை அடைய வேண்டுமென்பதே இதன்கருத்து. இது வாழ்க்கையின் பெருமையுடன் ஒட்டியதாகும். எமது நாட்டின் அரசியலிலும், சமுதாய வாழ்க்கையிலும் பெரிய மாறுதல்கள் ஏற்பட வேண்டியது அவசியமாகும். பணக்காரரே மேலும் மேலும் பணத்தைத் தேடிநிற்க, வறியவர் மேலும் மேலும் கீழ்நிலையை அடைந்து செல்வதாயிருக்கும் தற்போதைய நிலை முற்றாக நீங்கவேண்டும். ஒருவர் இருவர் பணத்தையும் பொருளையும் வைத்துக்கொண்டு மற்றவர்களை இன்னல்செய்யும் முறையும் நீங்கவேண்டும். இவ்விதமான புதியமுறைஅரசியலைத்தற்போது ருஷியாவில்காணலாம். அங்கே நடப்பன எல்லாவற்றையும் நாம் பின்பற்றுவததென்பதன்று. நாங்கள் ருஷிய அரசியல்முறையிலிருந்து கற்றுக்கொள்ளக்கூடிய அநேக விஷயங்கள் இருக்கின்றன. இம்முறையரசியல் உலகமெங்கும்பரவினால், தற்போது எங்கும் தோன்றி பெருநட்டங்களை விளைவிக்கும் யுத்தங்கள் ஏற்படக் காரணமில்லை. இவ்விதமான புதிய முறை இந்தியாவிற்கு எப்போது வருமென நான் சொல்லமாட்டேன். இப்புதிய முறையை நான் மிக அரிதாக மதிப்பதுமன்றி, அதை நாட்டில் வேரூன்றச் செய்வதற்கு நான் இடைவிடாத் தொண்டு ஆற்றுவேன். தற்போதைய காங்கிரஸ்வாதிகள் அதை ஏற்கப் பின்னிற்பர். காங்கிரஸ் சபையே தேசீய ஸ்தாபனம். தேசீய நோக்கத்துடனேயே தொண்டாற்றுவது. பொது சனங்கள் நன்மையே கைகூடவேண்டுமெனத் தொண்டாற்றுவது. அதை நன்குணர்ந்து உண்மை குறித்து திடமாகத் தொண்டாற்றச் சிலர் பயப்படுகின்றனர். பணக்காரர், தனவந்தர் முதலியோர் காங்கிரஸ் சபையை விட்டு நீங்கிவிடுவாரோ என்ற அச்சமும் இருக்கின்றது.

சடுதியில் மாற்றத்தைக்கொண்டுவருவதும் கஷ்டம். அப்படியாயின் காங்கிரஸ் கட்சியினரில் சடுதியில் பிரிவுகள் ஏற்படக்கூடும். பூரணசுதந்திரத்தைநாடித் தொண்டாற்றுபவருடன் கூடியுழைக்க நான் எவ்வழியிலும் ஆயத்தம். என்றாலும் எனது கொள்கைகளையும் எடுத்துக் காட்ட நான் விரும்புகிறேன். ஈற்றில் காங்கிரஸ் கட்சியினர் எனது எண்ணங்களை ஏற்பார்களென்பதே எனது நம்பிக்கை. தற்போதைய காங்கிரஸ்சபையின் நோக்கத்துக்கும், சமத்துவமுறை அரசியலுக்கும் சிறிதும் சம்பந்தங் கிடையாது. நமது நாட்டில் தொழிலபிவிருத்தி கைகூடினாற்றான் வறுமை ஓரளவுக்காயினும குறையக் கூடியதாகும்.

கதராபிவிருத்தியில் சேர்ந் துழைத்தவர்களுள் நானும்ஒருவன். கிராமப் புனருத்தாரணத்திற்குரிய தொண்டுகளில் கதர் அபிவிருத்தியைநாடி உழைத்தலும் ஒன்றாகும். அப்படியாயினும் இவைகள் நமது நோக்கத்தை அடைதற்கு வழிகளேயன்றி நோக்கமன்று. இந்தியாபோன்ற ஒரு பெரியதேசத்தில் மாற்றம் சீக்கிரம் ஏற்படவியலாது. கிராம முன்னேற்றத்தைநாடிச்செய்யும்தொண்டுகளில் நான் கூடி ஒற்றுமையாக உழைப்பவனாயினும் கிராம ஈடேற்றத்தைக்கொண்டுவர நான் கைக்கொள்ளவிரும்பும் வழிகள் வேறுள. ஹரிஜன விஷயத்தில் தீண்டாமை முதலியனவற்றை நீக்கவும் நான்செய்ய எண்ணும் வழிகளும் வேறுள.

### புதிய அரசியற்றிட்டம்

இனி,நான் எடுத்துக்கூறவிருக்கும் விஷயம் யாவர் மனத்திலும் அதிகம் குடிகொண்டதொன்றாகும். அதுயாதெனில், பிறிட்டிஷ் தேசாளுமன்றத்தில் சமீபத்தில் நிறைவேற்றப் பட்டுள்ள அரசியற்றிட்டமாகும். அதுமாட்டு நாம் கைக்கொள்ளவேண்டிய முறையாதென்பதே இப்போது நாம் அவசியம் முடிவுசெய்யவேண்டும். இத்திட்டம் எவ்வாறானதென்பதை இற்றைக்கு ஒருவருடத்துக்கு முன்னரே நாம் அறிவோம். சென்ற வருடம் காங்கிரஸ் தலைமைவகித்த பாபு இராஜேந்திரப்பிரசாத் இத்திட்டத்தை ஆராய்ந்து வெளியிட்ட அபிப்பிராயத்திலும் மேலதிகமாக நான் ஒன்றும் கூறவியலாதவனாகவிருக்கிறேன். இத்திட்டத்தைக் காங்கிரஸ் கட்சியினர் முற்றாகப் புறக்கணித்து இத்துடன் தாமொருநடபடிக்கையும் வைக்கப் போவதில்லையென்று முன்னரே கூறிவிட்டனர். அரசினரின் மதிப்பினைப் பெற்ற மிதவாதிகளே இதை முற்றாகக் கண்டித்தனராயின் இதன் அநர்த்தம் எவ்வாறென்பது சொல்லாமலே விளங்கும். இந்தியராகும் நாம் இத்திட்டத்தை ஏற்றால், மென்மேலும் அடிமைகளாவோமேயன்றி விடுதலைநாளைக் கிட்டிச்சேர்வதென்பது கூடாத காரியம். இத்திட்டத்தை வேண்டுமானால் மறந்துவிடலாம். ஆனால் இத்திட்டம் காரணமாக எழும் அவமானத்தை நாம் மறக்கவியலாது. அடிமைமுறையை ஸ்தாபித்துச் சட்டத்தை இயற்றிவிடின், அது அடிமைகளால் ஏற்றுக்கொள்ள வேண்டுமென நியதி உண்டா? வேண்டுமானால் அவர்கள்எக்காலத்திலும் அதனை எதிர்க்கலாம். இப்புதிய அரசியற்றிட்டத்தை நமது அரசியல்வாதிகள் நன்கு ஆராய்ந்துபார்த்து அதனை உதவாததென்று ஒதுக்கிவிட்டனர். உண்மையான திட்டமாயிருந்தால் அது சனங்கட்கு அதிகாரத்தை வழங்கும். இத்திட்டம் நிறைவேற்றப்பட்டதாயினும் இப்போது யார்கையில் அதிகாரமிருக்கின்றதென்பதை நாங்கள் பலவிஷயங்களிலும் பிரத்தியட்சத்திற் காண்கிறோம். இத்திட்டத்தை நாம் உரமாக எதிர்த்துநின்று அதைமுற்றாக ஒழிக்க முயல்வதன்றிவேறுஎன்னசெய்யத்தக்கது? அதைஎப்படிச்செய்வோம்?

ஐரோப்பாவிலிருந்து வந்தபின் இவ்விஷயமாக எனது நண்பர்களுடன் கலந்து உரையாடினேன். இத்திட்டம் புறக்கணிக்கப்பட வேண்டு மென்பதே யாவர் அபிப்பிராயமுமாக விருக்கின்றது. அதை எப்படிச் செய்வோ மென்பதிற்றான் சில வித்தியாசங்கள் ஏற்பட்டன. எங்களுக்குள் அபிப்பிராய பேதமிருப்பினும் நாம், ஒற்றுமையான விஷயங்களை அடிப்படையாகக் கொண்டு ஒத்துழைப்பதே அவசியம். குடியரசுமுறையில் ஒற்றுமையே பெரிதும் நாடற்பாலது.

(தொடரும்)


விரைவில் வெளிவரும்! எதிர்பாருங்கள்!!

**கனிஷ்ட பாடசாலைத் தராதரப்பத்திர வகுப்பு (1937)**
**[J. S. C] இலக்கியக் குறிப்பும்,**

**சிரேட்ட பாடசாலைத் தராதரப்பத்திர வகுப்பு (1937)**
**[S. S. C] இலக்கியக் குறிப்பும்.**

இவை சென்னைச் சர்வகலாசங்கத்தாரால் 'வித்துவான்' பட்டம் வழங்கப் பெற்றவரும், இயற்றமிழ்ப் போதகாசிரியருமாகிய வண்ணார்பண்ணை திரு. ந. சுப்பையாபிள்ளை அவர்களால் இயற்றப்பெற்றன. இவைகளில் பதவுரை, கருத்துரை, (எழுவாய், பயனிலை, செயப்படுபொருள், சொல்லிலக்கணம், சொல்நயம், பொருள்நயம், அணிநயம் முதலியவற்றை விளக்கும்) குறிப்புரை முதலாயின அடங்கியுள்ளன.

சண்முகநாதன் புத்தகசாலை அதிபர்கள்.

(112) 19-4-36


புறங்குன்றி கண்டனைய ரேனு மகங்குன்றி, மூக்கிற் கரியா ருடைத்து

# இலங்கையரின் ஆதீனமும் இந்தியரின் விஷமத்தனமும்

## எனது யாத்திரையிற்கண்ட அனுபவம்

### இலங்கைத் தமிழ்மக்களுக்கோர் வேண்டுகோள்

**நான்** நெடுநாட்களாய் இந்தியாவில்—அதிலும் தட்ஷண இந்தியாவிலுள்ள —ஸ்தலங்களைத் தரிசிக்க வேண்டுமென்று நினைத்திருந்தேன். நான் நினைத்தவண்ணம் சென்ற 1935-ம் ஸூ ஆவணிமாதத்தில் இலங்கையிலிருந்து புறப்பட்டு இராமேஸ்வரம் முதல் திருவண்ணாமலை வரையிலுள்ள திவ்விய ஸ்தலங்கள்தோறும் சென்று, அவ்வவ் வாலயங்களில் லிங்க ரூபமாய் எழுந்தருளியிருக்கும் பெருமானின் திவ்விய திருவடித் தாமரைகளைத் தொழுதும் அவ்வக் கோவில்கள்தோறும் நடைபெறும் நித்திய பூசை நைவேத்தியங்கள் ஆகியவைகளைக் கவனித்தும் வந்தேன். நான் இலங்கையிலிருக்கும் காலங்களில் இந்தியதேவாலயங்களின் ஐதீக கிரமங்களைப் பலர் புகழ்ந்துரைக்கக்கேட்டு இருக்கிறேன். நான் நேரடியாய்ப் பார்த்தவரையில் சில ஆலயங்களில் விஷயங்கள் மோசமாயிருப்பதையும் கண்ணுற்றேன். நான் சென்ற மாசிமாதத்தில் வேதாரணியம் சென்றிருந்தேன். அக்காலத்தில் ஸ்ரீ வேதாரணியேஸ்வரஸ்வாமி கோவிலில் மாசி மக உற்சவம் வெகு அலங்காரமாயும் ஆகம விதிப்படி பூசை நைவேத்தியம் அபிஷேகாதியாகாதி கிர்த்தியங்கள் யாவும் ஒழுங்கானமுறையில் வரையறுக்கப்பட்டு யாவராலும் போற்றுதற்குரிய சிறப்பாக இருந்தன. ஷ பெருமானின் பஞ்ச ரதாரோகணத்தன்று எண்ணிறந்த லட்சக்கணக்கான மக்கள்வந்து கூடிப் பெருமானைத் தெரிசித்தும் இன்பமெய்தினர். இக்கோவிலை நான் ஆங்குதங்கியகாலத்தில் சிலர், யாழ்ப்பாணம் வரணி ஆதீனமென்பதாய்ச் சொன்னார்கள். எனக்கு இதுவரையில் இத்துணைச் சிறப்புப்பெற்றதும் வேதங்கள் உற்பத்தியானதும் பண்டைக்கால அரசர் பெருமான்களால் கோடிக்கணக்கான சொத்துக்களை மானியங்களாக உடையதுமான கோவில் ஒன்று—அதிலும் இலங்கைவாசிகளின் ஆதிக்கத்திலிருக்குமென நினைக்கவில்லை. நான் விசாரித்ததில் ஷ கோவிலும் அதனைச் சார்ந்த 3500 வேலி நிலப்பரப்பைக்கொண்ட பெரிய கிராமங்களை யுடைத்தானதுமான இத் தேவஸ்தானம் தில்லைநாததம்பிரான் சந்ததியாருக்கே உரித்தானது என்றும், அவ்வரணிக்குருக்கள் பரம்பரையாரே டிரஸ்டிகளாய் இருந்து ஷ கோவிலின் நிர்வாகத்தை இத்துணை சிறப்புடன் நடாத்திவருகிறார்களென்றுமறிந்தேன். சுமார்ஒரு வாரத்தின்பின் மதராஸ் சென்றிருந்தேன். ஆங்கு சென்றபொழுது 'விடுதலை'யென்னும் பத்திரிகையைக் கண்ணுற்றேன். அதில் காணப்பட்ட சில விஷயங்கள் என்னைத் திடுக்கிடச் செய்தன. நான் நேரில் பார்த்ததற்கு விரோதமாக ஷ இதழில் வெளியான விஷயத்தைப் பார்த்ததும் தகவல் விளங்காது சிலரிடம் வினவினேன். இஃது யாதெனில், அத்தேசவாசிகளிற் சில பணக்காரர்கள் துவேஷபுத்தியால் மமதைகொண்டு, அயல்நாட்டினரான இலங்கையர் நமது ஊரில்வந்து அதிகாரம் செய்வதாவென எண்ணிச் சில பல கிளர்ச்சி செய்துவருவதாயுமறிந்தேன். சுமார் 15 வருடங்களுக்கு முன் இந்த ஜில்லாவிற்கே பெரிய தனிகரும் பெரும் செல்வந்தருமான வடபாதிமங்கலம் முதலியார் என்பார் அக்காலத்தில் ஷ தேவஸ்தானம் ஆதீனகர்த்தராயிருந்த சுந்தர பண்டாரசன்னிதி என்பார்மீது, உங்களுக்கு ஆதீனம் சொந்தமல்லவெனச் சென்னை பிரதம நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார். அந்நாளில் தேசாபிமானத்தின்பொருட்டு எங்கள் மாபெருந் தலைவரும் இலங்கையின் திலகமுமாகிய காலஞ்சென்ற பொன். இராமநாதர் அவர்கள் சென்னை ஹைகோர்ட்டில் சென்று, வாதியின் பெரிய வழக்கறிஞர்கள் எல்லாம் தலைநாணும்படி செய்து, இலங்கையின் வீரசிங்கமெனப் பெயர்பெற்று ஷ ஆதீனம் வரணியார்களுக்கே சொந்தமென நிலைநாட்டி வந்தாரென்று சிலர் சொன்னார்கள்.

தற்காலம் சில விஷமிகள் தோன்றி எவ்விதத்தாலும் இவ் விலங்கையரைத் துரத்தவேணுமென்ற நோக்கத்தோடு 'இன்டோமன்போர்ட்' என்னும் ஸ்தாபனத்தைக் கைக்கொண்டு அதன்மூலியமாய்ச் சில பல போலிக் காரணங்களைக் காட்டி, ஷயார்களை நீக்க முயலுகிறார்களென அறிந்தேன். அப்படி அவர்கள் தங்கள் ஆதீனத்தை இழக்கநேரிடுமாயின், இலங்கைத் தமிழ்மக்களாகிய நம்மெல்லோருக்கும் பட்டைநாமம் சாத்தினதற் கொப்பாகுமன்றோ! ஆகையால் எமது சகோதரர் அனைவரும் ஒன்றுசேர்ந்து இந்திய அரசாங்கத்தாரிடம் ஷ விஷயத்தைக்குறித்துக் கேட்கும்படி எமது அரசாங்கசபைப் பிரதிநிதிகளை வேண்டிக்கொள்ளுமாறு கோருகிறேன். சுமார் 400 வருடங்களுக்குமுன் தில்லைநாததம்பிரான் என்பார் அக்காலத்தில் யாழ்ப்பாணத்தைஅரசுபுரிந்த வீரசிங்கையாரிய அரசரைக்கொண்டும் இன்னும் பலபிரபுக்களைக்கொண்டும் திருப்பணி செய்வித்தாரென்பதை அங்குள்ள ரெவினியு இலக்கா ரிக்கார்டுகள் மூலம் தெரியவருகின்றது. அதுவுமல்லாமல் யாழ்ப்பாணத்திலிருந்து திருப்பணிசெய்வித்தவர்களின் நாமதேயங்கள் கற்களில் பொறித்திருப்பதும் குறிப்பிடத்தக்கது. இன்னும் பல அரசர்கள் மூலமகச் சொத்துக்கள் ஈட்டியதாயும் அறியக்கிடக்கின்றது. ஆதலால் நாமனைவரும் விடாமுயற்சியுடன் நமது அரசாங்கசபைப் பிரதிநிதிகளை இவ்விஷயத்தில் கவனஞ் செலுத்தும்படி வேண்டிக்கொள்வோமாக.

இங்ஙனம்,
**ஆறுமுகம்**
வண்ணைவாசி சிலோன்.

#### 'விடுதலை'ப் பேப்பரில் கண்ட விஷயம்

"25-3-36 புதன்கிழமைப் பத்திரிகையின் 6-வது பத்தியில், சென்னை இந்துமத சம்பந்தமான இனங்களைக் குறித்த போர்ட்டாரவர்கள் தஞ்சாவூர்ஜில்லா, திருத்துறைப்பூண்டித் தாலுகா வேதாரணியம் ஸ்ரீ வேதாரணியேஸ்வரஸ்வாமி கோவிலைக் குறித்து, என்னும் தலையங்கத்தின்கீழ், கீழ்க்கண்ட விஷயங்களைக் குறித்து ஷ கோவிலையும் அதற்குச் சொந்தமான சகல சொத்துக்களையும் சென்னை இந்துமத சம்பந்தமான இனங்களைக் குறித்த 1927-ம வருஷத்து II-வது ஆக்டின் VI-ம் அத்தியாயத்துக்குள்ப்படுத்த விளம்பரஞ் செய்யவேண்டுமென்று ஷ போர்ட்டாரவர்கள் அபிப்பிராயப்பட்டு ஷ விஷயத்தைத் தமது ஆபீசில் 11-5-36 ல் பகல் 12 மணிக்கு ஆலோசிப்பதென்று தவணை போட்டிருக்கிறார்கள். ஷ கோவில் முதலியவற்றின் தர்மகர்த்தரும் அதற்கு அக்கறையுள்ளவர்களும் ஏன் விளம்பரஞ் செய்யக்கூடாதென்பதற்கு 4-5-36 க்குள் எழுத்துமூலமாகக் காரணங் காட்டவேண்டுமாய் இதனால் அறிவிக்கப்படுகிறது."

#### விளம்பரஞ் செய்தற்குரிய காரணங்கள்

மானேஜிங் டிரஸ்டி முறைப்படி கணக்கு வைத்துவரவில்லை. 1345 பசலி பட்ஜட் சமர்ப்பிக்கவில்லை. கோவில்கள் சரியாய்ப் பழுது பார்க்கப்படவில்லை. கோவிலுக்கு ஒரு லட்ச ரூபாய்வரை கடன் ஏற்பட்டிருக்கிறது. 1919-ம் வருஷத்து A. S. No. 121 & 122 ல் ஹைக்கோர்ட்டாரால் ஏற்பட்ட ஸ்கீமில் ஷ கோவிலின் நிர்வாகத்தைக் குறித்துச் சரியாக மேற்பார்வை செய்வதற்கும் கண்டிப்பதற்குந் தக்க ஷரத்துகள் இல்லாமையாலும் சென்னை H. R. E. ஆக்டுக்கு விரோதமான ஷரத்துக ளிருப்பதனாலும் குறைபாடுடையதாயிருக்கிறது. என்பதே பிரசுரம்.

(ஒப்பம்)
K. நாராயணமேனன்,
அக்டிங் காரியதரிசி.

# இந்தியச் செய்திகள்.

### சுபாஷ் சந்திரவஸூ

காங்கிரஸ் மகாசபைக் கூட்டத்தில் சமுகமளிக்கவந்த தேசியத்தலைவராகும் சுபாஷ்சந்திரவஸூ அவர்கள் பம்பாய்வந்திறங்கியவுடன் கைதியாக்கப்பட்டனரென்பது யாவரும் அறிந்தவிஷயம். இப்போது இவர் பூனாநகரிலுள்ள எர்வாடா சிறைச்சாலையில் வைக்கப் பட்டிருக்கிறார். தேகாரோக்கியம் மிகவுங்குன்றி கஷ்டமடையும் இவருக்கு அரசினர் மென்மேலும் கஷ்டத்தைக் கொடுப்பதாயின் அது நீதியாகுமா? இவர்க்கு இடைவிடாது சிறைவாசம் ஏற்படுவதால் தேகாரோக்கியம் பெரிதும் பங்கமடைகின்றதென்பதும் வைத்தியரின் அபிப்பிராயம். இவர்க்கு வீயன்னாநகரில் சிகிச்சை செய்த வைத்தியர் இந்திய அரசினர்க்கு ஓர் கடிதம் அனுப்பியுள்ளார். அதில் வஸூ அவர்கள் ஆரோக்கியம் பழுதடையாதிருப்பதற்கு விடுதலையடைவது அவசியமென்று காட்டியிருக்கின்றனர். இவர் உடப்பு நிலைக்குவேற்றஉணவினைச் சிறையிலிருந்து அருந்தவியலாதென்றும் ஆகையால் இவருக்கு விடுதலையளிக்கப்படுவது அவசியமென்றுங் காட்டியுள்ளார். அரசினர் யாது செய்வாரோ?

### காங்கிரஸ் காரிய நிர்வாகசபை

இவ்வருடம் முழுவதும் காங்கிரஸ் விஷயங்களை நடத்தும் அதிகாரம் காங்கிரஸ் காரிய நிர்வாகசபைக்கேயுரியது. அச்சபையினையே மந்திராலோசனைச் சபையென்பர். இச்சபையினரைக் காங்கிரஸ்தலைவர் தாமாகவே தெரிந்து கொள்வர். இச்சபையின் அமைப்பிலேயே காங்கிரஸ் சபையின் பெருமை அடங்கியுள்ளது இச்சபையில் பதினைந்துபேர் அங்கத்துவம் பெறுவர். அவர்கள் பின்வருமாறு:—

தலைவர்: பண்டிதர் ஜவஹர்லால் நேரு; காரியதரிசி: கிருபாலினி; தனாதிகாரி: ஜமுனலால் பாஜாஜ்: மற்றையவர்கள் இராஜகோபாலாச்சாரி, இராசேந்திரப்பிரசாத், அப்துல்கலாம் அஜத், ஜெயப்பிரகஸ் நாராயணன், வல்லபாய்படேல், சுபாஸ் சந்திரவஸூ, அப்துல்கபர்கான், பூலுபாய் தேஜாய், அச்சுதபட்டுவர்த்தனன், ஜெயராம்தாஸ் தெஸலத்திராம், S.D. தேவோ, நரேந்திரதேவர் என்பவர்களே. இவருள் அப்துல்கபர்கான் சிறையிலிருந்து வெளிவரும்வரையும் அவர் சகோதரர் Dr. கான்ஹாகிப் அவர்கள் அங்கத்தவராகவிருந்து கடமை ஆற்றுவார்.

### காங்கிரஸ் மகாசபை

இத்தேசிய மகாசபையின் கூட்டம் இம்மாதம் 12-ம் 13-ம் 14-ம் திகதிகளில் இலக்குமணபுரியில் பண்டிதர் ஜவஹர்லால்நேருவின் தலைமையில் நடநதேறியது. சென்ற வருடம் காங்கிரஸ் மகாசபையின் அமைப்பில் அநேக மாற்றங்கள் ஏற்பட்டன. அதன்படி தெரியப்பட்ட பிரதிநிதிகள் 850 பேர் வரையில் சமுகமளித்தனர். இதற்கென அமைக்கப்பட்ட அலங்கார மண்டபத்திலேயே கூட்டம் ஆரம்பிக்கப்பட்டது. நடபடிக்கைகளைக் கண்டுகளிப்பதற்காக வந்திருந்தோர் தொகை 50000 பேருக்கு மேலாகுமென மதிக்கப்படுகிறது. மகாத்மா காந்தியடிகள் முதலாக அநேக தலைவர்கள் சமுகமளித்தனர். தலைவரும், மற்றும் பெரியார்களும் இதற்கென அமைக்கப்பட்ட மேடையின்மேலிருந்தனர். மேடையிலிருந்து 50 யாருக்கு அப்பால் பேச்சாளர் ஸ்தம்பம் ஒன்று அமைக்கப்பட்டிருந்ததாம் படிவழியே இவர்ந்து மேற்சென்று ஸ்தம்பம்மீது நின்று தீர்மானங்களைப் பிரேரிப்போரும் அனுவதிப்போரும் பேசுவர். உபசரணைச் சங்கத்தலைவர் வரவேற்புப் பிரசங்கஞ் செய்ததும் பண்டிதர் எழுந்து தமது தலைமைப் பேருரையைப் பொழிந்தனர். இப்பேருரை ஆங்கிலத்தில் எழுதப்பட்டதாயினும் அங்கிருந்தோர் விஷயங்களை நன்கறிவதற்காக ஹிந்தியில் மூன்று மணித்தியாலங்களாகப் பேசினர். பண்டிதரின் பேருரையின் அருமையைப் பாராட்டாதாரில்லை. இதற்குமுன் நிகழ்த்தப்பட்ட தலைமைப் பேருரைகளிலும் இவருடையது பல்வேறு வழியிலும் சிறந்ததென்றே யாவரும் கைக்கொண்டுள்ளார்.

### அடுத்த காங்கிரஸ் மகாசபை

ஆரம்பத்திலிருந்து காங்கிரஸ் மகாசபையின் வருடாந்தப் பொதுக் கூட்டம் மார்கழி மாதத்திலேயே நடத்தப்பட்டு வந்தது. ஆனால் சென்ற இரண்டு மூன்று வருடங்களாக மாசி, பங்குனி மாதங்களிலேயே வருடாந்தக் கூட்டத்தை நடத்தினர். அதனால் அடைந்த கஷ்டங்களோ மிகவதிகம். மார்கழிமாதமே ஏற்றகாலமென மறுபடியும் தீர்மானித்துவிட்டனர். அடுத்த வருடக் காங்கிரஸ் சபை எங்கு நடத்தவேண்டுமென்பதைக் குறித்தும் விவாதம் ஏற்பட்டது. பல்வேறு இடங்களிலிருந்துவந்த பிரதிநிதிகள் தங்கள் தங்கள் இடங்கட்கு அதை அழைத்தனர். மஹாறற்ரு பிரதேச காங்கிரஸ்சபையினர் பூனாநகரில் காங்கிரஸ்சபை கட்டாயமாகக் கூடவேண்டுமெனப் பிடிவாதமாக நின்றனர். 1895-ம் வருடத்துக்குபபின் அங்கே காங்கிரஸ் சபை கூடவில்லையென்றும் கட்டாயமாக அடுத்தவருடமாவது கூடுவேண்டுமெனவும் பிடிவாதமாகநின்றனர். தமிழ்நாட்டிற்கு அக்கூட்டத்தைச் சத்தியமூர்த்தி அழைத்தனர். எல்லைப்புற மாகாணத்திற்கும் சிலர் அழைத்தனர். வல்லபாய் படேல் குஜராத்தில் நடத்தவேண்டுமென்றனர். ஈற்றில் யாவரும் நன்கு யோசித்து மஹாறற்ரு பிரதேசத்தின் தலைநகராகும் பூனாநகரிலேயே கூடுவதாக முடிவுசெய்தனர்.

### போக்கும் வரவும்

புதிய இராசப் பிரதிநிதியாகும் லின்லித்கௌ பிரபு சென்ற வெள்ளிக்கிழமை (17-4-36) வந்திறங்கினர். அன்று சாயந்தரம் விலிங்டன் பிரபு இந்தியாவை விட்டுப் பிரயாணமாயினர். பிரயாணமாகுமுன் இரு இராசப்பிரதிநிதிகளும் சிறிதுபோது சம்பாஷித்தனர். அடக்குமுறையில் தேர்ந்த விலிங்டன் பிரபு என்னமந்திரத்தை உபதேசித்தாரோ யாரறிவர்?

**புறத்திற் சுத்தமும் அகத்திற் குற்றமும் உடையவரை உலகமுடைத்து.**

எவ்வுயிர்க்கும் அன்பாயிரு
ஒருவனே கடவுள்
ஈழகேசரி

வானந் துளங்கிலென் மண்கம்பமாகிலென் மால்வரையும், தானந் துளங்கித் தலைதடுமாறிலென் தண்கடலும், மீனம் படிலென் விரிசுடர் வீழிலென் வேலை நஞ்சுண், டுமையோன் றில்லா ஒருவனுக் காட்பட்ட உத்தமர்க்கே.

—அப்பர்சுவாமிகள்.

யாழ்ப்பாணம், சுன்னுகம்:
தாதுவரு சித்திரைமீ ௳

## இந்திய தேசிய மகாசபை

சென்ற ஐம்பது வருடமாக காங்கிரஸ் சபையின் தலைமையை வகித்த அநேக அரசியற்றலைவர்கள் அரிய பெரிய பிரசங்கங்கள் செய்து சுதந்தர உணர்ச்சியை நாட்டில் கிளப்பி வந்தனர். அப்பிரசங்கங்கள் யாவும் இலக்குமணபுரியில் சென்றவாரம் பண்டித ஜவஹரலால் நேரு அவர்கள் செய்த தலைமைப் பேருரைக்கு நிகராகுமா? பண்டிதரின் வீரமொழிகளைக் கேட்டோர் யாவர்தான கிளர்ச்சியடையார்? இந்திய அரசியல் நிலையை உலக நிலையுடன் சீர்தூக்கிப்பார்த்து எவ்வழி இந்தியர் தொண்டாற்றின் இந்திய மாதா விடுதலை பெறுவாளென்பதையும் விவரித்துக் காட்டினர். இதுவரையும் சுதந்தர இயக்கம் சென்ற வழி ஒன்று. இப்போது பண்டிதர் எடுத்துக்காட்டும் வழியோ முற்றுகப் புதியது எனினும் போதரும. இவர் கூறும் வழி கைக்கொள்ளப்படின் அநேகபுரட்சிகள் ஏற்படக்கூடுமெனப் பலர் அபிப்பிராயப்படலாம். ஆனுல் கீழ்நிலையிலுள்ள ஒருநாடு சடுதியில் மேனிலையையடைய வேண்டுமாயின் புரட்சிகளைக்கண்டு வெருட்சியடையாதிருப்பதும் பிரதானம.

மகாத்மாகாந்தியடிகட்கு அடுத்தபடியில், இந்திய மக்களால் பெரிதும சன்மானிக்கப்படும் தலைவர் பண்டிதர் ஜவஹரலால் என்பதை எவரும் மறுக்கமாட்டார். இந்தியாவின் தற்போதைய நிலைமையைநோக்கின், அதற்கேற்றதலைவர் பண்டிதராகவே காணலாம். இவ்வித மிக மேன்மைவாய்ந்த தலைவரின் ஆதரவில் இமுறை மேற்படி சபையில் முடிவுசெய்யப்பட்ட தீர்மானங்கள மிக முக்கியமானவையென்றே கூறவேண்டும். தற்போது ஐரோப்பிய குடியரசு நாடுகளில ஏற்பட்டகலகங்களை நோக்கி, அவற்றை உதாரணமாகக் கொண்டு இந்தியாவில் எவ்வித அரசியல் ஏற்படவேண்டும், அவ்வித அரசியல் ஏற்படுதற்கு எவ்வழியில் தொண்டாற்ற வேண்டுமென எடுத்துக் காட்டினர். தாம் எடுத்துரைக்கும் வழிகளைப் பெரும்பானமையோர் தற்போது அங்கிகரிக்காது விடினும் ஈற்றில் அவைகள் யாவராலும் அங்கிகரிக்கப் படுமென்பதே அவரது துணிபான முடிபாகும். இந்தியர் இப்போது மிக மெதுவாகவே முன்னேறுகின்றன ரென்றும், ஆனுல் முன்னேற்றம் மிகவிரைவாகச் சேறவேண்டின், ருஷிய அரசியல்முறையே ஏற்றதென்பதும் அவர் கருத்தாகும்.

பிறிட்டிஷ் அரசினர்மீது பண்டிதர் சுமத்தும் குறைகட்கோ அளவின்று. தற்போதைய அரசியல் முறையின் அக்கிரமத்தை எடுத்துக் காட்டியதிலிருந்து அவர் சுதந்தர வேட்கையின் வேகம் எத்தன்மைத்தென ஓரளவுக்காயினும் அறியக் கிடக்கிறது. பிறிட்டிஷார் தமது நாட்டில் எவ்வளவு சுதந்தரத்தை அனுபவிக்கின்றனரோ அவ்விதசுதந்தரத்தை இந்தியரும் தம் நாட்டில் அனுபவிக்க வேண்டுமாம். ஆனுல், சுதந்தரத்தைநாடி யுழைக்கும் மார்க்கத்தைக் குறித்தேபண்டிதர்க்கும் மற்றையோர்க்கும் வித்தியாசங்கள் ஏற்படுகின்றன.

உண்மை யதிகாரத்தைத்தமது கையில்வைத்துக்கொண்டு சிலஅரைகுறையான உரிமைகளைப் பொது சனங்கட்கு அளித்துவிடின், இந்தியர் சுயராச்சியத்தை அடைந்துவிடுபவராவாரா? காந்தியடிகள் புரட்சிமூலமாகச் சுதந்திரத்தை நாட்ட முயலுங்கால், சிலர் இடைக்கிடையே திருத்தங்களைப்பெற்றுக் கடைத்தேறலாமென்று எண்ணுகின்றனர். இவ்வழியைப் பண்டிதர் அங்கீகரித்தாரல்லர்.

பண்டிதர், ருஷிய அரசியல்முறையைப் பின்பற்றுவ தென்பது முற்றுக அங்கீகரிக்கக் கூடியவிஷயமன்று. அவ்வரசியலில் எத்தனையோ ஊழல்கள் இருக்கக்காணலாம். அவைகள் இந்தியாவில் இடம்பெறின், சமுதாய வாழ்க்கையில் பெருங்கெடுதிகள் வந்தெய்துமென்பது நிச்சயம். மேலும் காங்கிரஸ் மகாசபையில் சேராதவர்கள் ஏகாதிபத்தியவாதிகள் (Imperialist) என்றும் அவர்களின் துணையைக் கொண்டே பிறிட்டிஷார் தமது அரசியலை நடத்துகின்றனரென்பதும் முற்றுக உண்மையென நாம் அங்கிகரிக்கவியலாது. அரசினர் செய்கைகள் தேசிய நோக்குக்கு மாறுகவிருந்தும், அவைகளை ஆதரிக்கும் கட்சியினர் உளராதல் பற்றி, எல்லாக்கட்சியினரையும் படரடியாகக்கூறி ஒதுக்க வியலாது. உதாரணமாக மிதவாதக்கட்சியினர் காங்கிரஸ்கட்சியினர் கொள்கைகளை அங்கிகரிக்காவிடினும், அரசினர்செய்வன சொல்வன எல்லாவற்றையும் சீர்தூக்கிப்பாராது ஏற்கமாட்டார். இவர்களும் ஓரளவுக்குத் தேச முன்னேற்றத்தை நாடி யுழைக்கும் கட்சியினரென்றே கூறவேண்டும.

சாதாரண பொதுமக்கள் சுதந்தரவுணர்ச்சி யடையிற்றுன் இந்தியா மீட்சியடையுமென்பது பண்டிதரின் நம்பிக்கை. பாமர சனங்களைப் புறத்தில்விட்டு இந்தியா முன்னேறுவதென்பது எப்படிக்கூடும? அவர்களின் பிரதம நன்மைகளை நாடியுழைப்பினன்றி அவர்கள் சுதந்தரப்போரில் கலப்பாரா? தேச முன்னேற்றத்துக்கு ஏழை மக்கள் ஒருங்குசேர்த்துழைப்பதும் இன்றியமையாத விஷயமாகும். பொதுமக்களின் சுயராச்சியமே வேண்டப்படுவது.

புதிய அரசியற் றிட்டத்தைக் காங்கிரஸ்சபையினர் அங்கிகரியாவிடினும், அத்திட்டத்தை நாட்டின நன்மைக் கியைய உபயோகித்தற் பொருட்டுத் தேர்தலில் பங்குபற்றுவதும் இன்றியமையாத விஷயமாகும். இப்போது காங்கிரஸ்சபை தேர்தலில்பங்குபற்றலாமென முடிவு செய்யப்பட்டுள்ளது. ஆனுல்மந்திரி முதலிய உத்தியோகங்களை ஏற்பதைப்பற்றிய விஷயம் தேர்தல் முடிந்தபின்னரே ஆலோசிக்கப்படவேண்டுமென முடிவுசெய்யப்படுகிறது. இது ஏற்றமுறையென்பதே எமது அபிப்பிராயமும்.

# அபிசீனிய மகாயுத்தம்.

## டெலி நகரம் இத்தாலியர் வசமாயது

## சமாதானம் ஏற்படும்

## அடிஸ் அபேபாவும் விரைவில் கைப்பற்றப்படுமாம்

## இத்தாலிய சேனுபதியின் திடமான நம்பிக்கை

இத்தாலியர் டெலி என்னும் நகரத்தைக் கைப்பற்றிவிட்டனரெனப் புதினங்கள் கூறுகின்றன. இந்நகரத்தில் அபிசீனிய அரசினர் பன்னுளாகத் தாமதித்துநின்று யுத்தத்தை நடத்தினர். இந்நகரம் பிடிபட்டதும் இனி தலைநகராகும் அடிஸ் அபேபா நகரமும் விரைவில் இத்தாலியர் வசமாகுமெனச் சொல்லப்படுகின்றது. ஆகாயப்படையினரே இந்நகரத்தை முதல் சென்றடைந்தனரென்றும் பின்னரே மற்றைய சேனைகள் சென்று சேர்ந்தனவென்றும் சொல்லப்படுகின்றது. இரண்டுநாட்களில் இத்தாலியர் நூறு மைல் முன்னேறினராம். அபிசீனியரின் இறுதிக்காலம் சமீபித்துவிட்டதென இத்தாலியர் கூறுகின்றனர். இந்நகரில் இத்தாலியர் தங்கள் கொடியை நாட்டிவிட்டனர். இப்புதினம் இத்தாலியில் பெரும் குதூகலத்தையும் ஆனந்தத்தையும் உண்டுபண்ணிவிட்டதாகும். இத்தாலிய சேனுபதியாகும் தளபதி பாடக்கிளியோ எப்பிறில்மாதம் 21-ந் திகதிக்குமுன் அடிஸ்அபேபாவினைத் தாம் நிச்சயமாகக் கைப்பற்றிவிடக்கூடுமென்று சொல்லுகிறுர்.

இது இவ்வாறுகச் சர்வதேசசங்கத்தினர் செய்வன யாவும் நகைப்புக்கிடமாகின்றது. இவர் ஒருவிஷயத்தை ஆலோசித்து முடிவுசெய்ய மாதங்கள் பல செல்கின்றன. முடிவு செய்தபின் செய்வதாயின் வருடங்கள் செல்வது நிச்சயமே. சமீபத்தில் சர்வதேச சங்கத்தின் 13 பேர்கொண்ட நிர்வாக சபையினர் சில விஷயங்களை ஆலோசிப்பதற்கு முயற்சிசெய்யுங்கால்,இத்தாலிய பிரதிநிதி தடைகளை உண்டாக்கினர். தாமதங்களை ஏற்படுத்தின் அதற்குள் யுத்தம் முடிவடையுமென்றும் அபிசீனியர் நசிக்கப்பட்டுப் போவரெனவும் இத்தாலியர் கருதுகின்றனர். யுத்தம் செய்யுங்கால் இத்தாலியர் செய்யும் அக்கிரமங்கட்கோ அளவின்ற. இத்தாலியர் நச்சுப்புகையை வருவிக்கும் குண்டுகளால் 19 முறையாகத் தாக்கினரெனச் சொல்லப்படுகிறது. டெலி நகர் தாக்கப்படுங்கால் நச்சுப்புகையினுல் ஏற்பட்ட நட்டத்திற்களவில்லை. இவ்விஷயமாகத்தானும் சர்வதேசசங்கத்தினர் இன்னும் நடபடிக்கைகள் கையாளாதிருப்பது பெரிதும் வியாகுலத்துக்கிடமாகும்.

சமாதானம் ஏற்படுமோவெனின் அதுவும் இலகுவில் கைகூடுமென்று கூறவியலாதாகின்றது. தாம் அதிகம் வெற்றியைப் பெற்றுவிட்டமையால் இன்னும் அநேக உரிமைகள் தங்கட்கு விசேஷமாக அளிக்கப்பட வேண்டுமென இத்தாலியர் கேட்கின்றனர். மழையினுல் யுத்தம் தடைபடக் கூடுமென்று பலர் எண்ணியிருந்தனர். இதுவரையில் அதனுல் சங்கடம் ஏற்படவில்லை. இவ்வளவில் வெற்றியடைந்து அதிகம் முன்னேறின இத்தாலியர் இனித் தாமதிப்பரென எப்படி நம்புவது? மேலும் இத்தாலியர் யுத்தத்தில் 12 கோடி பவுணுக்கு மேல் செலவுசெய்து விட்டனர். இப்போதும் 450000 இத்தாலியர் அபிசீனிய போர்முனையில் நின்று யுத்தம் செய்கின்றனர். இவர்கட்கு ஒருநாளில் செல ாகும் பணம் இம்மாத்திரமன்று.

இச்சமயத்தில் அபிசீனியர் யாதுசெய்வர். சர்வதேச சங்கத்தினரை நோக்கியழைக்கின்றனர். சமாதானத்தை அபிசீனியர் விரும்பினுல் பின்வரும் நிபந்தனைகளை அவர்கள் உடனே ஏற்கவேண்டுமென இத்தாலியர் கேட்கின்றனர்:-

1. இத்தாலிய அபிசீனிய விஷயத்தில் சர்வதேச சங்கம் சிறிதும் தலையிடக் கூடாது.

2. சமரச உடன்படிக்கைகளை இத்தாலியர் அபிசீனியருடன் நேரே கலந்து பேசுவாரன்றிச் சர்வதேசசங்க மூலமாகப் பேசச் சிறிதும் உடன்படார்.

3. சமாதானம் பேசப்படும்போது இத்தாலியர் யுத்தத்தை நிறபாட்டார்கள்.

இந்நிபந்தனைகளைத் தாம் சிறிதும் ஏற்கவியலாதென அபிசீனியர் மறுத்துவிட்டனர். இந்நிபந்தனைகளை ஏற்பதிலும் தாம் கடைசிவரையும் யுத்தஞ் செய்து இறந்துவிடுவது உசிதமென அபிசீனியர் கூறுகின்றனர். பிரான்சியர் நிதானமாக நிற்காதபடியாற்றுன் சர்வதேச சங்கத்தினர் துணிவாக ஒரு நடபடிக்கையையும் இத்தாலியர்க்கெதிராகத் கையாள வியலாதாகின்றது. இவ்விதம் பிரான்ஸியர் தந்தரமாக நிற்பின் ஜர்மனியர் விஷயத்திலும் பிறிட்டிஷார் சிறிது பின்வாங்கக்கூடும். பிராண்சியர் கைக்கொள்ளும் முறையிலிருந்தே எல்லா விஷயங்களும் அறியவரும்.

அபிசீனிய சக்கரவர்த்தினி ஒரு பெரிய செய்தியை உலகின் பல பாகங்கட்கும் அனுப்பியிருக்கின்றுர். இத்தாலியர் நியாய விரோதமாகச் செய்யும் நிஷ்டூரங்கள் யாவையும் எடுத்துக்காட்டினர். சர்வதேச சங்கத்தை மிக அவமானப்படுத்தும் இத்தாலியர்க்கு மாறுக நடபடிக்கைகள் யாவும் விரைவில் கையாளப்படவேண்டுமென்று அரசரின் மனைவியார் கூறுகின்றுர். சங்கத்தை ஒருபுறத்தில் விட்டுச் சமாதானஞ் செய்வதாயின் அது சங்கத்துக்கு எவ்வளவு அவமானம். அபிசீனியர் இவ்வித பரிதாபநிலையையடைந்து கஷ்டமடையுங்கால் வல்லரசுகள் பார்த்துநிற்பது நீதியாகுமோ வென்றும் கேட்கப்படுகின்றது.

மேலும் டெலிநகரம் இன்னும் இத்தாலியரால் பிடிக்கப்படவில்லை யென்றே அபிசீனியர் கூறுகின்றனர்.

## தென்னிந்தியாவிலும் விஷமத்தனமாகுமா?

தென்னிந்தியாவிலுள்ள இந்துக்களின் ஆலயங்கள் சீருடன் குறைவின்றிப் பரிபாலிக்கப்படுதற்கு வேண்டிய பாதுகாப்புகள் சென்ற சிலவாண்டுகட்குமுன் அரசினரால் செய்யப்பட்டது. ஏற்றமுறையில் பொது ஸ்தாபனங்களாகும் ஆலயங்களை, அவைகளை நடத்தும தருமகர்த்தர்கள் நடத்தாவிடின், அவைகளை அரசினர் நடத்துதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்தற்கு அச்சட்டம் போதிய வசதிகளை அளிக்கின்றதெனலாம். தேவாலயத்தின் சொத்துக்கள் பொதுச்சொத்தென்றும், அவைகள் பொதுவாகவே பரிபாலிக்கப்படவேண்டுமெனத் தருமகர்த்தாக்கள் எண்ணின், ஒரு பாதகமும் வந்தெய்தக் காரணமின்று. அவ்வாறன்றி அரசினர் விதிகட்குமாறுக வரவு செலவுகளைத் தாம் நினைத்தபடி கணக்கு முதலியன பதியாது நடத்திநிற்பின் அரசினர் நடபடிக்கைகளைக் கையாள்வரென்பது உண்மையே. வேதாரணியத் தேவாலயம யாழ்ப்பாணத்தவரின் பரிபாலனத்தின் கீழ் இருப்பது என்பது யாழ்ப்பாண மக்கட்கோர் பெருமையே. தர்ம கர்த்தாவாம் பதவியைப் பெற்றோர் நீதிவழியில் முறை தவருது பரிபாலிப்பின் எவ்விக்கினமும் வந்தெய்தக் காரணமின்று. யாழ்ப்பாணத்தார் பொறுப்பிலிருக்கின்றதே எனத் துவேஷம் கொண்டு ஆபத்து விளைக்க முன்வரின், நாம் விழித்தெழுந்து வேண்டியதைச் செய்ய வேண்டியதும் பெருங் கடனே. விஷயத்தைவிட்டு உள்ளூரவர்வெளியூரவரென்று துவேஷம் பாராட்டி அடையும் பயன்தான் யாது? மேற்படி ஆலயதரும கர்த்தாக்கள் தமது கடமையை இனிது முறைதவருது நடத்தியிருப்பின் எவ்வித சங்கடத்துக்கும் அஞ்ச வேண்டியதில்லை. சூழ்ச்சிகளும், பொருமையும், துவேஷமும் நீடித்து நிலைப்பதன்று.

## ஒரு செய்தி!

புதுவருட விடுமுறை காரணமாக இவ்வார "ஈழகேசரி" 12 பக்கங்களில் வெளிவரலாயிற்று. அடுத்தவாரம் வழக்கம் போல் 16 பக்கங்களில் வெளிவரும்.

## மங்கையர்க்கரசி ஞாபக நன்கொடை

யாழ்ப்பாணத்துக் கந்தர்மட வாசரும், யாழ்ப்பாணம் பெரியகடை மயில்வாகன ஸ்ரோரின் அதிபருமாகிய திரு. அ. நா. கந்தையா. அவர்களின் ஒன்றரை வயதுப் புதல்வி மங்கையர்க்கரசியார் சென்ற 12-4-36ல் தேகவியோக மடைந்தமை குறித்து "ஈழகேசரி"க்கு நன்கொடையாக உதவிய ரூபா 2 வரப்பெற்றனம், குறித்த மங்கையர்க்கரசியாரின் பிரிவாற்றுயருறும் யாவர்க்கும் எமது அனுதாபம் உரியதாகுக. ப-ர்.

## ரூபா 150.

### இழந்தவர் யார்?

நான் இன்று வல்லேரேட்டில் ரூபா 150-ம் அத்துடன் இன்னும் சில தொகை ரூபாவும் எடுத்தேன். அதை இழந்தவர், கீழ்க்கண்ட விலாசத்தின்படி என்னிடம் வந்து அப்பணம் என்னத்துக்குள் வைக்கப்பட்டிருந்ததென்றும், அத்துடன் வேறு என்ன இருந்ததென்றும், எவ்வகையான நாணயங்கள் இருந்தனவென்றும், பணத்தின் தொகையைத் திட்டமாகவும் சொல்வரேல், பணம் அவருக்குத் திருப்பிக் கொடுக்கப்படும்.

இங்ஙனம்
கரணவாய்தெற்கு 16-4-36. } க. பொன்னம்பலம் உபாத்தியாயர்

## காதல்மீறிய கலியாணம்

நீர்கொழும்பைச் சேர்ந்த கற்றறு வென்னுமிடத்தில் ஸ்ரீமதி சிபில்கொன்ஸ்ரன்ஸ் டீ. சில்வா என்னும் 19 வயதுப்பெண் தனது பெற்றோரின் விருப்பத்திற்குமாறாக தனது மைத்துனனாகிய திரு. F. R. செனிவிரத்தின என்பவரை விவாகஞ்செய்து கொள்வதற்கு கோட்டாரின் உத்தரவு வேண்டினர். விசாரணைமுடிவில் பெண்ணின் விருப்பத்திற்கு விவாகஞ்செய்ய உத்தரவளிக்கப்பெற்றது. பெண்ணின் பெற்றோரும் உறவினரும் நியாயவாதிகள் மூலமாக இதற்கு மறுத்து நின்றபோதிலும் அது பயன்படவில்லை. இப்பெண்ணுக்கு $2\frac{1}{2}$ லட்சம் ரூபா பெறுமதியான ஆஸ்தியிருக்கிறதாம். கோட்டாரின் உத்தரவுகிடைத்ததும் உடனே விவாகம் நடந்தேறியது.

## ஜவஹர்லாலின்சீவியசரித்திரம்

பண்டிதர் ஜவஹர்லால் தமது சீவிய சரித்திரத்தைத் தாமேயெழுதியுள்ளார். சென்றசிலவாரங்களாக அது பத்திரிகைமூலமாக ஒழுங்காகப் பிரசுரிக்கப்படுகின்றதை யாவரும் அறிவர். ஆனல் இது புத்தகவடிவமாக இம்மாதம் 24ந் திகதி லண்டன்நகரிலுள்ள ஓர் புத்தகப் பதிப்புச் சங்கத்தாரால் வெளியிடப்படும். அது 600 பக்கங்கள் கொண்டது. பண்டிதர் சிறையில் இருக்குங்காலத்திலேயே அதை எழுதிமுடித்தனர். இச்சரித்திரத்தில் இந்தியாவின் அரசியல் விருத்தி நன்கு எடுத்துக்காட்டப்பட்டிருக்கின்றது. அநேக தலைவர்களைப் பண்டிதர் கண்டித்துள்ளார். அது காரணம் பற்றி பண்டிதர் அவர்கள்மீது துவேஷங்கொண்டவரன்று.

# இந்திய அரசாங்கத்தின் அடாதசெயலைக் குறித்து ஆசிரியருக்கு வந்த கடிதம்

**கனந்தங்கிய ஐயா!**

தேச முன்னேற்றத்திற்காகத் தனது தேகநிலையைக்கூட ஒரு சிறிதும் ஓராது சுற்றுப்பிரயாணம் செய்து, இலங்கைக்கு விஜயம்செய்து இங்கிருந்து கல்கத்தாவுக்குப் புறப்படவேண்டுமென்ற உயர்ந்தநோக்கத்துடன், வீயன்ன நகரிலிருந்து பம்பாய்க்கு வந்துசேர்ந்த ஸ்ரீஜத் சுபாஸ் சந்திரபோஸ் அவர்கள் அன்றுகாலை 10-20 மணிக்குப் பம்பாய் பொலிஸ் டிபுடிகமிஷனரான கான்பகதூர் பெட்டிகாரா என்பவரால் கைதுசெய்யப்பட்டதையும், மற்றும் விபரங்களையும், நீங்களும் மகாஜனங்களும் பத்திரிகைகளில் ஊன்றிப் படித்திருப்பீர்களென்று நம்புகிறேன். இந்நிகழ்ச்சி எதிர்பார்க்கப்படாததல்ல. திரு. போஸ் அவர்கள் கைதுசெய்யப்படுவதற்கு இரண்டு நாட்களுக்குமுன்னர், தன்னுடன் கப்பலில் பிரயாணம்செய்த ராய்ட்டர் நிருபர் ஒருவரிடம், "நான் சுயேச்சையாக இருக்க முடியாது. என்னை அதிகாரவர்க்கம் எந்த நிமிஷத்திலும் சிறைச்சாலைக்கு அனுப்பிவிடும்" என்று மனம்நொந்துகூறியதை நண்பர்கள் அறிவார்கள். திரு. போஸ் அவர்களின் இவ்வார்த்தைகள் உணர்ச்சியுள்ள ஒவ்வொரு இந்தியனுடைய இரத்தத்தையும் கொதிக்கச்செய்யும் என்பதற்கு என்ன ஐயா தடை? அடக்குமுறை ஆட்சியில் ஸ்ரீஜத் போஸைப்போன்ற பரிசுத்தவான்களுக்கும், தன் மதிப்புள்ள ஆண்மக்களுக்கும், சுதந்தர வீரர்களுக்கும் இடமேது? அதிகார தேவதைகளின் கால்களில் விழுந்து, இச்சகம்பேசி, பல்லை இளித்து, பட்டம், பதவி வேட்டையாடும் முதுகெலும்பில்லாத பதர்கள்மட்டுமே இன்றைய இந்தியாவில் சுயேச்சையுடன் உலாவ முடியுமென்பதை இந்திய அதிகாரவர்க்கம் அடிக்கடி இந்திய மக்களுக்கு இடித்திடித்துப் போதித்தவண்ணமாயிருக்கின்றது. ஏற்கனவே சிறைவாய்ப்பட்டதன் பயனக, பயங்கரமான நோய்க்கு இலக்காகி உடல்நலத்திற்காக அயர்லாந்து சென்று மீண்ட திரு. போஸை அவசர அவசரமாகக் கைதுசெய்யக் காரணம்தான் என்ன? அவர்மீது பம்பாய் அரசினர் குற்றமெதனையும் சாட்டவில்லை. நீதிமன்றத்தில் நிறுத்திக் குற்றப்பத்திரிகை வாசித்து, அவரை விசாரணைசெய்து கண்டிக்கவேண்டுமென்ற நியாய உணர்ச்சியும், கௌரவ புத்தியும் பம்பாய் அரசினருக்கு ஏற்படாமலே போய்விட்டது. அவர் இயற்றிய பழிதான் என்ன? தனக்கும் தன்னினத்தாருக்கும் சுதந்தரம் வேண்டுமென்று அவர் கேட்டார். எம்மை ஈன்ற தாய்நாடு மற்ற நாடுகளைப்போல் சுதந்தரத்துடன் சிறந்து விளங்கவேண்டுமென்று அவர் அவாவினர். உண்மையை ஒட்டி யோசிக்குமிடத்து, திரு. போஸ் அவர்கள் செய்த குற்றங்கள் இவைதான் ஐயா! இன்று இந்தியா இருக்கும் நிலைமையில் செய்யத்தகாத ஒருகாரியத்தை அதிகாரவர்க்கம் கண்மூடித்தனமாகச் செய்துவிட்டார்கள் என்று நான் துணிந்து கூறுவேன். திரு. போஸ் அவர்களைச் சிறையில் தள்ளிப் பூட்டிய அதிகார வர்க்கத்தைப் பொறுப்புள்ள ஒரு பத்திரிகையாவது கண்டிக்காமலில்லை. திரு. போஸைச் சிறையிலிட்டுப் பூட்டவேண்டிய நெருக்கடி ஒன்றும் நேர்ந்துவிட்டதாகத் தெரியவில்லை. அவர் கடுமையாகவோ, அல்லது இராஜத்துவேஷத்தைவெளிப்படுத்தக்கூடிய முறையிலோ பிரசங்கம் செய்யவுமில்லை. எந்தவகையில் பார்த்தாலும் குற்றமற்ற ஒரு நிரபராதியை அநியாயமாகச் சிறையில் தள்ளிப் பூட்டியிருப்பது அறிவற்ற செயல் என்றுதான் சொல்லவேண்டும். சட்டங்களையும், திட்டங்களையும், காலதேச வர்த்தமானங்களை யனுசரித்துப் புத்திசாலித்தனமாக அமுல் நடத்துவதுதான் பகுத்தறிவுள்ள இராஜதந்திரிகளுக்கு அழகு என்பதைப் பம்பாய் அரசினர் உணராமல்போனது துக்கமான விஷயம். திரு. போஸை சிறையில் தள்ளிப் பூட்டியதால் என்ன நன்மைதான் ஐயா பம்பாய் அரசினருக்குக் கிடைத்துவிட்டது? ஏமிலேது! அனுவசியமான பரபரப்பு தேசத்தில் ஏற்படுவதற்குப் பம்பாய் அரசினரிடம் கொடுத்துவிட்டதுதான் மிச்சம். அலகாபாத் இளவரசன் என்று கொண்டாடப்படும் பண்டிட் ஜவஹர்லால்நேருவின் தலைமையின்கீழ்புதிதாக நடைபெற்ற காங்கிரஸ்மகாசபையின் பகையைப் பம்பாய் அரசினர் சாசுவதப்படுத்திவிட்டார்கள் என்று சொன்னல் அதில் என்ன ஐயா பிசகிருக்கமுடியும்? சமீபத்தில் இலங்கைக்கு விஜயம்செய்யப்போவதாக இருந்த திரு. போஸை வேண்டுமென்றே சிறையில் தள்ளிப் பூட்டிய அதிகாரவர்க்கம் இலங்கை மகாஜனங்களின் பகைமையையும் ஈட்டிக்கொண்டுவிட்டார்களென்றுதான் சொல்லவேண்டும்.

ஸ்ரீஜத் சுபாஸ் சந்த்ரபோசுக்கு சிறைவாசம் ஓர் நூதனமானதன்று. இன்று அவர் பம்பாய் அரசினரின் விருந்தாளியாக ஜெயில் வீட்டிற்குச் சென்றிருப்பது எத்தனையோ தடவைகளில் இதுவும் ஒன்று என்பதை ஈண்டு குறிப்பிட விரும்புகிறேன். நுண்ணிய அறிவும், அன்புகதும்பும் ஹிருதயமும், உயர்ந்த கல்வியும், உன்னதமான லக்ஷியங்களும், யௌவனமும், அஞ்சாநெஞ்சமும் ஒருங்கேயமையப்பெற்ற ஸ்ரீஜத் போஸைப்போன்ற மேதைகள் தமது வாழ்க்கையில் பெரும்பாகத்தைச் சிறைச்சாலைகளில் கழிக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுவது இந்தியாவிற்கு மட்டுமல்ல உலகத்திற்கே மகத்தான நஷ்டமாகும். ஸ்ரீஜத்போஸ் அவர்களின் பெயர், எழுச்சிபெற்ற இந்தியாவின் தற்காலச் சரித்திரத்தில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படுமென்பது நிச்சயம். நாகரீக உலகத்தாராலும், பகுத்தறிவுள்ள மனிதர்களாலும், உச்சிமேற்றூங்கிக் கொண்டாடப்படும் பெரியோரை இந்திய அதிகாரவர்க்கம் அவமதிப்பதுதான் பொருந்துமென்று நினைக்கின்றது போலும்! கருணையின் உறைவிடம்போன்ற நமது பாரதத்தாய்தனக்காகப்பாடுபடும்புதல்வர்களுக்கு பரிசில்களாக அவமதிப்பையும், சிறைவாசத்தையும், தடியடிகளையும், இறுதியில் சாக்காட்டையும் நல்கிவிடுகிருள். கேவலம்! சட்டங்களையும், அடக்குமுறைகளையும், மட்டும் கொண்டு நிர்வாகத்தை நடத்துவதென்ற குறுகிய புத்தி இந்திய சர்க்காருக்கு தடித்துப்போய் விட்டதாக நினைக்க வேண்டியதாக இருக்கின்றது. "குறுகிய புத்திக்கும் விசாலமான ஏகாதிபத்தியத்திற்கும் சம்பந்தமே கிடையாது" என்று சில வருடங்களுக்கு முன் ஒரு சந்தர்ப்பத்தில் அறிவாளியான ஸாங்கி சொல்லியுள்ள வார்த்தைகளை, இந்திய அதிகார்வர்க்கத்திற்கு நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். ஸ்ரீஜத் சுபாஸ்சந்த்ரபோஸ் சிறைசெல்வதும் அங்கு அவதிப்படுவதும் ஆகிய எல்லாம் நன்மைக்கேயாகும்

பாரதநாட்டுச் சகோதரர்களே! சகோதரிகளே! நீங்கள் அடிமைகளாயிருக்கும் வரை உங்களுக்கு சுதந்தரம் கிடைக்கமாட்டாது. "மயிலே! மயிலே!! இறகுகொடு" என்று பகுத்தறிவற்ற அந்த பக்ஷியின் காலில் அடித்துக்குதித்தால் மயில் இறகு கிடைக்குமா? அதுபோல் நீங்கள் அடிமைகளாயிருக்கும்வரை உங்களுக்கு இம்மியளவேனும் தன் மதிப்பே கிடையாது என்ற உண்மையை நீங்கள் உணரவேண்டும். அடிமைகளாயிருக்கும் வரை உங்களுக்கு தன் மதிப்பென்பது இருக்கமுடியாதென்ற அதிகார வர்க்கத்தின் இழிந்த கொள்கைக்கு இந்தியர் சாவுமணியை அடிப்பார்களென்றும், "தேசியம், தேசியம்" என்று உருக்கமாகப் பேசித்திரியும் இலங்கை மக்களும் தங்கள் தங்கள் நிலைமைக்குத் தக்கவாறேனும் பங்கெடுத்து உழைத்து, நம் இந்தியத் தாயை விடுதலை செய்விப்பார்களென்றும் ஸ்ரீஜத் சுபாஸ்சந்த்ர போஸ் கூடிய சீக்கிரம் சிறையினின்று வெளிவந்து பொறுமையை இழந்துவிடாது மீண்டும் மீண்டும் பாரதநாட்டின் விடுதலைக்காக உழைப்பாரென்றும் நான் எல்லாம்வல்ல இறைவனைப்பிரார்த்தித்துக்கொள்ளுகிறேன்.

கொழும்பு 10-4-36. } இங்ஙனம், இ.சின்னத்துரை.


## விளம்பரம்

### தங் யூவ் ஜின் சைன பல்லுக்கட்டுபவரும் பரிசோதிப்பவரும்

செம்மாதெரு, யாழ்ப்பாணம்

தங்கம், வெள்ளி முதலியவைகளினலும், செயற்கை முறையாகவும், வெண்மை நிறமுடையதாகவும் தனிப்பற்களும், பல்வரிசையும் செய்து கொடுக்கப்படும்.

விலை சகாயம், 10 வருடத்துக்கு உத்தரவாதம் பெற்றது.

ஒருமுறை பரீட்சித்துப்பாருங்கள்!

(113) 19-4-36


## சரஸ்வதி விலாச சபையின் 22-வது ஆண்டு நிறைவுவிழா

ஷை சபையின் 22-வது ஆண்டு விழா (10-4-36-ல் "கலாநிலைய" மண்டபத்தில் திரு. V. நாகலிங்கம் அவர்கள் தலைமையில் சிறப்பாக நடந்தேறியது

மாட்சிமை தங்கிய ஜார்ஜ் மன்னரின் மரணத்தைக்குறித்தும், அதிகார் M. S. இராமலிங்கம், டக்டர் S பொன்னுச்சாமி, திரு. V. இராமலிங்கம், திரு. T. தில்லையம்பலம் அவர்களின் பிரிவைக் குறித்தும் இரு அனுதாபப் பிரேரணைகள் தலைவராலும், திரு. T. முத்துச்சுவாமிப்பிள்ளை அவர்களாலும் கொண்டுவரப்பட்டு ஏகமனதாய் நிறைவேற்றப்பட்டன.

காரிய தரிசியினதும் தனதிகாரியினதும் அறிக்கைப்பத்திரங்கள் வாசிக்கப்பட்டபின்னர் உத்தியோகத்தர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

**போஷகர்கள்:** ஸ்ரீமத் சுவாமி விபுலானந்தா, கௌரவ வை. துரைசுவாமி முதலியார் செ. இராசநாயகம், திருவாளர்கள். நெவின் செல்வத்துரை, S. இராசரத்தினம்.

**உபபோஷகர்கள்:** திருவாளர்கள் C. பெருமாள்பிள்ளை, M சுப்பிரமணியம் K. கனகசபை M. வேலாயுதம்பிள்ளை.

**தலைவர்:** திரு. R. சிவகுருநாதர்.

**உபதலைவர்கள்:** முதலியார் S. T. சிற்றம்பலம், திருவாளர்கள் மு. சபாரத்தினசிங்கம், T. முத்துச்சுவாமிப்பிள்ளை, M. சுப்பிரமணியம், R. R. நல்லையா, V. நாகலிங்கம், S. துரையப்பா.

**கூட்டுக்காரிய தரிசிகள்:** திருவாளர்கள் S. P. தர்மபாலன், N. கணேசலிங்கம்

**தனதிகாரி:** திரு. C. நடராசபிள்ளை

**நாடகநிர்வாகஸ்தர்:** திருவாளர்கள் V. M. கிருஷ்ணசுவாமி, R. றங்கநாதன்,

**சங்கீத நிர்வாகஸ்தர்:** திருவாளர்கள் N. இராமச்சந்திரன், M. குமாரசிங்கம், K. சோமசுந்தரம்.

**நாடகமேடை நிர்வாகஸ்தர்:** திருவாளர்கள் M. கதிரவேற்பிள்ளை, E. T. கிச்சுக்கொக்.

**உடைநிர்வாகஸ்தர்:** திரு. S சபாரத்தினம்.

**உதவிநிர்வாகஸ்தர்கள்:** திருவாளர்கள் S. P. நடராசா, M.K.முத்துக்குமாரு.

**காரியநிர்வாகசபை:** திருவாளர்கள் C. C. சோமசேகரம், T. N. சுப்பையா, S. U. சோமசேகரம், பிரமஸ்ரீ N. நாராயணன், பண்டிதர் V. T. சம்பந்தன், வித்துவான் K. இராமலிங்கம், திருவாளர்கள் V. இராமநாதன், N.பொன்னையா, K. நவரத்தினம், E. நாகலிங்கம், V. தம்பிராசா, K. A. கனகசபை.

**ஆலோசனைச்சபை:** ஸ்ரீமதி. மகேஸ்வரிதேவி நவரெத்தினம், ஸ்ரீமதி. ஐசுவரியம் இராசதுரை, ஸ்ரீமதி. S. விவேகானந்தராசா, பிரமஸ்ரீ. C. S. கணபதிஐயர், பிரமஸ்ரீ. K. இராமச்சந்திரஐயர், பிரமஸ்ரீ. நவநீதகிருஷ்ணபாரதியார், பிரமஸ்ரீ. V. இராமசாமிசர்மா, பிரமஸ்ரீ. பரமேஸ்வரஐயர், திருவாளர்கள் T. குமாரசாமிப்பிள்ளை, C. ஆறுமுகதாசன், M.S. பரம், A. இராசுப்பிள்ளை.

**கணக்குப்பரிசோதகர்:** C. A. சந்தப்பசேகரம்.

பின்னர் சபைக்கு ஓர் கட்டடம் அவசியந் தேவையாயிருப்பதால் அதற்குப் பணஞ்சேகரிப்பதற்காக ஓர் நிர்வாகசபை நியமிக்கப்பட்டது.

திரு. முத்துச்சாமிப்பிள்ளையவர்களால் பழைய உத்தியோகத்தர்களுக்குத் துதி கூறப்பட்டபின், தலைவர் திரு. சிவகுருநாதர் அவர்கள் சிறு சொற்பொழிவு ஆற்றினர். கூட்டமினிது முடிவெய்திய தின்பின் ஒரு மணித்தியால நேரமளவில் சங்கீதக்கச்சேரி நடைபெற்றது.—கடித

# உடல் நூல்

(சாவகச்சேரி ஆசிரியகலாசாலைப் பிரசாரகர் திரு. நி. வ. வீரகத்திப்பிள்ளை அவர்கள்)

(உரிமை ஆக்கியோனுக்குரியது)

## 7ம் அத்தியாயம்.

### உணர்ச்சிக் கருவிகள் (The Sense-Organs)

உணர்ச்சி யென்பது பொறிகள் வழியாய மனதிலுண்டாகும் உணர்வு அல்லது அறிவையாம். இவ்வகை உணர்வுகள் ஐந்து. அவையாவன:- பரிசம் அல்லது ஊறு; இரசம் அல்லது சுவை; கந்தம் அல்லது நாற்றம்; உருவம் அல்லது ஒளி; சத்தம் அல்லது ஓசை என்பவைகளே. இவைகள் பஞ்சபுலன்களெனப்படும். பஞ்சபுலன்கள் ஐந்தும் பஞ்சேந்திரியங்கள் வழியாயுணரப் படுகின்றன. அப்பஞ்சேந்திரியங்களி னமைப்பையும், அவைகளின் தொழில்களையும் அவைகளைப்பேணும் முறைகளையும் இவ்வதிகாரத்தா லுணர்த்தக் கருதி இதற்கு இப்பெயரை யிடலானேன்.

1. பரிசம் அல்லது ஊறு என்னும் புலன் தோலென்னுங் கருவியாலுணரப்படுவதொன்று. தோல் கழிவுறுப்புகளுள் விசேஷமானது. அது பற்றி அதனை முன்னத்தியாயத்துள் விஸ்தரித்துள்ளேன் (முன்னதிகாரம் பார்க்கவும்) முன்னதிகாரத்துடன் தொடர்பற்றனவாய இவ்வுறுப்புடன் தொடர்புடைய சில குறிப்புகளைக் கீழே காணவும். நந்தேகத்திற்படும் பொருட்கள் அல்லது நாம் தொடும் பொருட்கள் ஒப்பமோ, முரணோ, குளிர்மையோ, காங்கையோ, கூரோ, மழுங்கலோ, வன்மையோ, மென்மையோ என்று பகுத்தறியும் அறிவு பரிசம் அல்லது ஊறெனப்படும். தோலில் அமைந்திருக்கும் நரம்புகள் தானே இவ்வுணர்வுக் காதாரமாய் விளங்குகின்றன. அந்நரம்புகள் முள்ளந்தண்டுக் கொடியிலிருந்து கிளைத்துத்தோலெங்கும் பரந்திருக்கின்றன. உணர்ச்சி எவ்விடத்திற் கூர்மையோ அவ்விடத்திலே மற்றவிடங்களைப் பார்க்கிலும் அதிக தொகையான நரம்புகள் பரந்திருக்கக்காணலாம். உதாரணமாக விரல்களின் நுனிகளிலும், உதடுகளின் விளிம்புகளிலும் நரம்புகள் அதிகமாகவும் உணர்ச்சி கூர்மையாகவும் இருக்கின்றன. இப்புலன் மனுஷரின் சரீரப்போங்குக்குத் தக்கதாகவும் வயதுக்குத் தக்கதாகவும் வித்தியாசப்படுகின்றது. எவ்விதமாயெனில் ஓர் முதிர்ந்த ஆளின் உணர்ச்சியிலும் ஓர் சிறுபிள்ளையின் உணர்ச்சி கூர்மையாயிருக்கின்றது. இப்புலன் மூளையின் பலனுக்கும், நரம்புகளின ஸ்திதிக்கும், தோலின் இரத்தத்தின் அளவுக்குத் தக்கதாகவும் வித்தியாசப்படும்.

2. இரசம் அல்லது சுவை:—பொருள்களின் ருசியை அறிவுறுத்தும் அறிவே சுவையென்பதாம். இப்புலனுக்குக் கதுப்புகளின் உட்பக்கமும் அண்ணமும் ஒருவாறு உதவியாயிருந்தாலும் நாவே பிரதான உறுப்பாயிருக்கின்றது. நாவானது ஓர் தனிப் பொருளல்ல. நீருமஞ் சவ்வினால் மூடப்பட்ட பேசிகளின் கூட்டமாம். இவ்வுறுப்பைப் பற்றிச் சீரணமண்டலத்தைப் பற்றிக் கூறிய போதும் சிறுகக் குறிப்பிட்டுள்ளேன். அக்குறிப்புகளையுங் கண்ணுறவும். நாவின் மேற்பக்கம் நாக்கடுவென்னுஞ் சிறுகூரான முனைகளினாலே மூடப்பட்டிருக்கின்றது. இந்நாக்கடுக்களில் சுவை நரம்புகள் கூந்தல் கூந்தலாயமைந்திருக்கின்றன. இவைகளைக் கண்ணாரக் காண விரும்பினால் எலுமிச்சஞ் சாறு போன்ற கடும்புகளை நாவிலே தடவிப்பின் கண்ணுறவும். எப்பதார்த்தங்களுஞ் சுவைக்கப்படுமுன் அவைகள் சலரூபமாய் மாறவேண்டும். பொருள்கள் சுவைக்கப்படும்போதுண்டாகும் ருசி சுவை நரம்புகள் வழியாய் மூளைக் கெட்டுகின்றது. இப்புலனால் மனுஷருக்காம் பிரயோசனங்கள் எவையெனில், இதன் உதவியினால் நாம் நமக்குத்தேவையான உணவுகளைத் தெரிந்து கொண்டு இணக்கமற்ற உணவுகளைத் தள்ளிவிடுகின்றோம். இப்புலன் நம்பழக்க வழக்கங்களுக்கேற்ப வித்தியாசப் படுகின்றது. உதாரணம் புகையிலை சுண்ணாம்பு முதலியன உண்பவர்களிடத்து இப்புலன் வித்தியாசப்படுகின்றது.

(தொடரும்)

# கலம்பகம்

சென்ற செவ்வாய்க்கிழமை வதுளையிலிருந்து கொழும்புக்குப்புறப்பட்ட புகையிரதத்தொடர், வட்டகொடை என்னுமிடத்தில் பாதையை விட்டு இறங்கியதால் கொழும்புக்கு வந்து சேரவேண்டிய நேரத்திலும் பார்க்க ஆறு மணித்தியாலம் பிந்தி வந்து சேர்ந்ததாம். அந்தவண்டியிற் பிரயாணஞ் செய்தோர் காயமின்றித் தப்பிக் கொண்டனராம்.

o o o

ஐரோப்பாவில் பிர்மஞான சங்கச் சார்பாக பிரசாரம் செய்வதற் கெனச் சென்னையிலிருந்து கப்பல் மூலம் டாக்டர் அருண்டேலும் அவரது மனைவியாரும் சென்ற 18-ந் திகதி புறப்பட்டிருக்கின்றனராம்.

o o o

குருகாக்கல் என்னுமிடத்தில் பொலிசார் 280 கள்ள நாணய நோட்டுக்களையும் அவற்றைத் தயார் செய்வதற்குரிய சில ஆயுதங்களையும் கைப்பற்றியதோடு, அவற்றைத்தயாரித்தார்களெனக் கூறப்படும் நால்வரையும் கைது செய்திருக்கின்றனராம்.

o o o

ஆஸ்திரேலியாவுக்குச் சென்றிருக்கும் கொழும்பு றேயல் கல்லூரி கிறிக்கற் கோஷ்டியாருக்குத் தென் ஆஸ்திரேலிய அரசினரால் ஓர் விருந்துக் கொண்டாட்டம் நடாத்தப்பட்டதாம்.

o o o

"அடிமைத்தீவு" எனப் பொருள்படும் கொம்பனித்தெருவின் ஆங்கிலப்பெயரை மாற்றி வேறு பெயர் அமைப்பது பற்றி ஆலோசனை நடைபெற்று வருகிறதாம்.

o o o

இத்தாலியர் கிழக் காபிரிக்காவில் செய்யும் மனுஷத்தன்மைக்கு மாறான யுத்த முறையைப்பற்றி அபிசீனிய சக்ரவர்த்தினியால் ஒலிபரப்புங்கருவிமூலம் செய்யப்பட்ட பிரசங்கம் மருதானையிலுள்ள ஒருவரால் ரேடியோ கருவிமூலம் கேட்கப்பட்டதாம்.

தங்காலையைச் சேர்ந்த பெலியத்தை என்னுங் கிராமத்தில் நால்வர் சேர்ந்து பகிடியாகப் பேசிக் கொண்டிருக்கையில், பகிடிப்பேச்சினால் கோபங் கொண்ட சாமுவேல் என்னும் வயோதிபர் அவர்களில் ஒருவனைக் கத்தியால் குத்தியதாகவும், மற்றவர்கள் அந்த வயோதிபரைத் தடியால் அடித்துக் காயப்படுத்திய தாகவும் கூறப்படுகிறது.

o o

தெகிவலையைச் சேர்ந்த புஞ்சுகாமி என்னும் வயோதிபப் பெண் சமையலறையில் சமையல் செய்துகொண்டிருக்கையில் பன்னலில் எரிந்துகொண்டிருந்த போத்தல் விளக்கு அவள்மேல் விழுந்து அவளது உடையில் தீப்பற்றியதால் எரிந்து மரணமடைந்தாளாம்.

o o o

அவிசாவலையைச் சேர்ந்த எச். பி. கரோலிஸ் அப்புகாமி என்பவர், பாவித்த பழைய தபால் முத்திரையைக் கடிதத்தில் ஒட்டி உபயோகித்தாரெனக் குற்றஞ்சாட்டப்பட்டு 5 ரூபா அபராதம் விதிக்கப் பெற்றாராம்.

o o o

கோட்டயம் என்னுமிடத்துக்குப் பத்துமைல் தூரத்திலிருக்கும் கிபார் என்னுமிடத்திலுள்ள ஒரு கோயில் சென்ற 11-ந் திகதி ஹரிசனங்களுக்குத் திறக்துவைக்கப் பட்டதாம்.

o o o

பாலக்கோல் என்னுமிடத்தைச்சேர்ந்த ஒருவாலிபன் ஒரு இராமர் படத்தின் மேல் விறகு கட்டைகளை யடுக்கி மண்ணெண்ணெயை ஊற்றி நெருப்பைவைத்துவிட்டு, அதன்மேல் ஏறிப்படுத்து எரிந்து உயிர் துறந்தானாம்.

o o o

ஜெர்மன் தேச ஸ்தானீகராகப் பிரிட்டனிலிருந்து வந்த பாரன்வான் ஹோயிச் என்பவர் சென்ற 10-ந் தேதி திடீரென உயிர் துறந்தனராம். o o

ராஸ்னுக்கந்தை என்னுங் கிராமத்தைச் சேர்ந்த எம். பொடிபண்டா என்பவர், ஆர். தேமிஸ்சிங்கோ என்னும் ஒருவரைக் கத்தியால் குத்திக் கொன்றுவிட்டாராம். o o

புதிய டில்லியிலுள்ள விலிங்டன் ஆஸ்பத்திரியுடன் வேலைசெய்ய இன்னொரு ஆஸ்பத்திரியை அமைப்பதற்கென லேடி விலிங்டன் பிரபுவால் 20,000 ரூபா நன்கொடை அளிக்கப்பட்டிருக்கிறதாம்.

o o o

யாக்காகலைத் தோட்டத் தலைவராகிய திரு. எஸ். குணசேகராவைத் தாக்கி, அவரிடமிருந்த 250 ரூபாவைப் பறித்தார்களென எட்டுப்பேர்மீது மாத்தறைப் பொலிஸ்கோட்டில் வழக்குத் தொடரப்பட்டிருக்கிறதாம்.


# இரும்புச்சாமான்கள்!

## எங்கே சகாயம்?

திறமான தணிசுகள்!

பெரும் தொகையான "ஏச்" கேடர்கள், மூலைக் கேடர்கள், "ரீ" கேடர்கள், "ப" கேடர்கள், கொங்கிறீற் வலைகள், கம்பிகள், சிலாகைகள் இன்னும் கட்டிடங்கள் மற்றும் வேலைகளுக்கும் தேவையான பலவித இரும்புச்சாமான்கள் இவ்விடம் கைவசம் இருக்கின்றன.

## சிலோன் காட்வயர்ஸ்ரோர்ஸ்

இரும்புக்கடை

## வல்வெட்டித்துறை

*Head office :-* "Jubilee Buildings"
Old Moor Street, COLOMBO.

(93)—8-3-36


# NOTICE OF SALE

## விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டு 5630-ம் இலக்க வழக்கில் 1936-ம் ஸு பங்குனி மீ 19-ந் திகதியைக் கொண்ட கோட்டுக் கட்டளைப்படி கீழேவிபரிக்கப் பட்டிருக்கும் ஆதனங்கள் 1936-ம் ஸு சித்திரை மீ 27-ந் திகதி திங்கட்கிழமை முற்பகல் $8\frac{1}{2}$ மணிதொடக்கம் அந்தந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### விபரம்

இமையாணன் குறிச்சி

சபாபதிப்பிள்ளை கந்தையா கைம்பெண் முத்தாச்சிப்பிள்ளை வழக்காளி

தனக்காறகுறிச்சி

1. கதிர்காமர் கனகசபை கைம்பெண் சின்னம்மா
2. கனகசபை வேலுப்பிள்ளை

எதிராளி

2-ம் எதிராளி காலஞ்சென்ற கனகசபை அருளம்பலத்தின் ஆதனத்துக்கு காரியஸ்தரான வகையில் எதிராளிகள்

### ஆதனங்கள்

1. தனக்காற குறிச்சியிறை அசுக்கன் திடலும் வடக்கிற் கலட்டியும். இதற்கு யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டு 1543-ம இலக்கப் பிரிவிடல் வழக்குத்தீர்வையோடு அணைக்கப்பட்டிருக்கிறபடத்தின்படி நிலப்பரப்பு 68. குளி 12. இதிற் குறித்த படத்தின்படி C. D. என்ற அட்சரமிட்ட துண்டுகளுக்கு நிலப்பரப்பு 28. குளி 11. எல்லை கிழக்கு முருகேசர் கார்த்திகேசுவுக்கும் மறுபேருக்குமுடையஆதனம். வடக்கு காடு. மேற்கு பொன்னையா பெண் மீனாட்சிப்பிப்பிள்ளைக்குடைய ஆதனம். தெற்கு சின்னவன் சுறுவலுக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். இதிற் சொரியலாய் அரைவாசியும் குறித்த படத்தில் "G" என்றட்சரமிட்ட துண்டுக்குள்ளிருக்கிற கிணற்றிற் பங்கும் வழிவாய்க்காலுரித்தும்.

2. ஷை இறை கொம்பனைத்தூக்கி இரண்டுபிரிவும். நெற்பரப்பு 32. எல்லைகிழக்கு சின்னத்தம்பி மகள் பொன்னாச்சிக்கும் மறுபேருக்கு முடைய ஆதனம். வடக்கு வேலுப்பிள்ளை கைம்பெண் சேதுப்பிள்ளைக்குடைய ஆதனம். மேற்கு குட்டித்தம்பி பெண் வள்ளிப்பிள்ளைக்குடைய ஆதனம். தெற்கு பொன்னையா பெண் மீனாட்சிப்பிள்ளைக்கும் மறுபேருக்கு முடைய ஆதனம். இதிற் சொரியலாய் அரைவாசியும்.

3. ஷை இறை. பலமிதிப்புவும். நிலப்பரப்பு $24\frac{1}{2}$. ஷை நிலப்பரப்பு $43\frac{1}{4}$. கூடிய நிலப்பரப்பு $67\frac{3}{4}$. எல்லை கிழக்கு சின்னத்தம்பி சுப்பிரமணியத்துக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். வடக்கு நல்லதம்பி கைம்பெண் அன்னபூரணத்துக்கும் சகோதரனுக்குமுடைய ஆதனம். மேற்கு சின்னத்தம்பி சுப்பிரமணியத்துக்கும் பிள்ளைகள் மகேஸ்வரிக்கும் புவனேசுவரிக்கும் நேசம்மாவுக்குமுடைய ஆதனம். தெற்கு வீரகத்திப்பிள்ளை மகள் பாக்கியத்துக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். இவ்வெல்லைக்குட்பட்ட நிலம் கிணறு அடங்கலிற் சொரியலாய் $\frac{7}{80}$ டங்கும்.

4. கெருடாவிற் குறிச்சியிறை. ஆவிளாததோட்டம் நிலப்பரப்பு 21. ஷை நிலப்பரப்பு 3. ஷை நிலப்பரப்பு $3\frac{1}{2}$. இவைகளிலாட்சிப்படி மேற்குப்புறமாக $\frac{2}{5}$ பங்குக்கு நிலப்பரப்பு 11. பனைகள் வடலிகளும் எல்லை கிழக்கு சின்னத்தம்பி பெண் பாறுபதிக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். வடக்கு தில்லையம்பலம் பெண் வள்ளிப்பிள்ளைக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். மேற்கு ஒழுங்கையும் சின்னத்தம்பி கைம்பெண் இராசம்மாவுக்கும் மறுபேருக்குமுடைய ஆதனமும். தெற்கு சின்னத்தம்பி முத்து பெண் பொன்னம்மாவுக்கும் மறுபேருக்கு முடைய ஆதனம். இவ்வெல்லைக் குட்பட்டவைகளிற் சொரியலாய் அரைவாசியும்.

வே. க. சின்னத்தம்பி
கொம்மிஷனர்.

கரவெட்டி,
1936-ம் ஸு பங்குனி மீ 30 உ
(110) 19-4-36.

# ஸ்ரீமான் சி. வை. தாமோதரம்பிள்ளை அவர்கள் வாழ்க்கை வரலாறும் வண்டமிழ் வளர்ச்சியும்.

(கொழும்பு "ஆகாயவசனி" நிலையத்தில், வெள்ளவத்தை, குல. சபாநாதன் அவர்கள், இம்மாதம் 26-ந் தேதியன்று நிகழ்த்திய சொற்பொழிவு.)

(முற்றொடர்)


இந்நூல் உலகிற் தோன்றிய காலமுதல் நூற்றைம்பது இருநூறு வருஷமாக நன்னூல் முதலிய ஏனைய சிற்றிலக்கணங்களெல்லாம் பயிற்சிகுன்ற இதுவே தலையெடுத்துவந்தது. இதற்கிடையில் திருவாவடுதுறையாதீனத்தார் நன்னூலுக்குச் சங்கரநமச்சிவாயப் புலவரைக்கொண்டு ஒருவிருத்தியுரை யெழுதுவித்தும் இன்னும் அவ்வுரை சிறக்கும்படி சமஸ்கிருத திராவிடக்கடல்கள் முழுதுமுண்டு தேங்கிய ஸ்ரீ சிவஞானமுனிவராற் திருத்திப் புத்தம்புத்துரையெழுதுவித்தும், அதுவும்போதாதெனக் கண்டு அம்முனிவரால் இலக்கணவிளக்கச் சூறாவளியென்று ஓர் அநியாயகண்டனம் இயற்றுவித்தும் இந்நூலை நசிக்கமுயல்வாராயினர். சமணர்காலத்தின்பின் தான்தோன்றிய காலமுதற் றென்னாடெங்குந் தமிழ்க்கல்வியை விர்த்திசெய்வதிலுஞ் சைவசமயத்தை வளர்ப்பதிலும் முதன்மைபெற்றோங்கிய இவ்வாதீனத்தாருக்கும் இஃதென்ஞான்றும் ஒரு களங்கமேயாம். இனி இந்நூல் அச்சில் வாராமையினால் இதன்பயிற்சி குன்றியதென்கின்றார் பிள்ளையவர்கள். சூறாவளிமாறாய்மோதியென்? சூக்கிராவிருத்திவான் ஆர்த்தர்த்திடிததென்? சன்னதுரோணசயித்திரதர் என்ன துரோகம் இயைத்திடினுங் "தேரோன மறுகிடையாத குறையன்றோ களத்தவித்தான் சிறுவன்'. அச்சுவாகனங்கிடையாக்குறையன்றோ இவ்விலக்கணவிளக்கமடங்கியது'. இந்நூலையச்சிடற்குரிய செலவுமுற்றையும் ஸ்ரீ திருமயிலை போடயகாமராசபாண்டிய நாயக்கதுரையவர்கள் பொறுத்தமையால் கி. பி. 1889 இல் இலக்கணவிளக்கம் எனும் பிறிதொரு இரத்தினம் பிள்ளையவர்களால் மாசகற்றித் தமிழ்த்தாயின் கிரீடத்திற்றுலங்கிற்று.

இதன்பின்னர் சூளாமணியையும் அச்சிடவேண்டுமென்னும் விருப்பால் அதனையும் பரிசோதித்து வந்தார். இதனை எங்ஙனம் பரிசோதிக்கத் தொடங்கினர் என்பதைப் பிள்ளையவர்களே இந்நூல் முகவுரையிற் குறிப்பிட்டிருக்கின்றார்கள். "நாலைந்து வருஷத்தின்முன் யான் ஸ்ரீ கைலாச பரம்பரைத் திருவாவடுதுறையாதீனத்துச் சற்குருநாத சுவாமிகள் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணியதேசிக மூர்த்திகளைத் தரிசிக்கப் போயிருந்தபோது சுவாமிகள் சூளாமணி ஓர் அருமையான நூலென்றும் அஃது இப்பொழுது மாணதசை அடைந்திருப்பதால் அதனை அச்சிட்டுக் காப்பாற்றுதல் தக்கதென்றுந் தமிழ்ப்புராதன நூல்களை என்னால் இயன்றமட்டுந் தேடிப் பரிசோதித்து வெளியிடும் முயற்சியிற் கையிட்டிருப்பதால் யானே அதனைச் செய்யவேண்டுமென்றுங், கட்டளையிட்டதுமன்றிச், சென்னை மகாலிங்கையர் பிரதியொன்று தமது ஆதீனத்திலிருந்ததை எடுத்து என்வசம் அனுப்பியுமருளியது. அதனைவாங்கி வாசித்துப்பார்த்தபோது காரிகையில் இலக்கியமாகக் காட்டப்பட்டுள்ளனவுஞ் சொற்சுவை பொருட்சுவைகளிற் சிறந்தனவாயினும் யாது நூலகத்திருந்து எடுக்கப்பட்டனவென இக்காலத்து அதனை ஓதுவார்க்குத் தெரியாதனவுமாகிய விருத்தங்கள் ஆங்காங்குக் கிடத்தல் கண்டு, அஃதோர் அரிய இலக்கியமேயெனத் தேறச் சுவாமிகள் கட்டளையைச் சிரமேற்றாங்கி வேறுபிரதிகள்தேட ஆரம்பித்தனன்." பிள்ளையவர்கள் இந்நூலைப் பரிசோதித்து நூறுபக்கம்வரை அச்சிட்டபின், அதனை முற்றும் திருத்தியச்சிடவேண்டிநேர்ந்தது. நூல் அச்சுவாகனமேற்றுதல் இலகுவான செயலென நீங்கள் விளங்கிவிடக்கூடாது. பாருங்கள்! ஒரு நூலுக்கே எவ்வளவு சிரமப்படுகிறார். அங்ஙனம் திருத்தியச்சிட வேண்டிவந்த காரணத்தையும் பிள்ளையவர்களே குறிப்பிட்டிருக்கின்றார்கள். "நூறுபக்கம்அளவு அச்சானபின்பு, தென்தேசப்பிரதியொன்றுளனது நண்பரும் பண்டைத்தமிழ்நூல் ஆராய்ச்சியே தமக்குப் பொழுதுபோகும் விநோதமாக உடையவருஞ் சென்னைத் தபாலாபீசுகளின்மேல் விசாரணைத் தலைவருமாகிய மகா ஸ்ரீ மல்லாகம் வி. கனசபைப்பிள்ளையவர்களுடையது, அவரிடந் திரிச்சிராப்பள்ளியிற் தமிழ் முனிஷி ஒருவர் வாங்கி வைத்திருந்து இறந்துபோகக், கும்பகோணத்தில் ஒரு ஹெட் கன்ஸ்டேபிள் கையிற் சேர்ந்திருந்ததை அறிந்து, அதனை அவ்விடத்திற் பொலீஸ் மேல் விசாரணையிலிருக்கும் ஸ்ரீ கிருஷ்ணசாமிநாயுடு, அவர்கள் சகாயத்தாற் தருவித்தேன். அற்கும் முதன்மூன்று பிரதிகளுக்கும் அநேகவேறுபாடுகள் இருந்தமையால் இன்னுஞ்சில பிரதி எவ்விடத்தாயினும் இருக்குமாயின் அவற்றையுந் தேடி ஒத்துப்பார்த்துக் கொண்டே அச்சிடுதல் அத்தியாவசியகமென்று உட்கொண்டு அங்கங்கே சமணர்கள் குடியிருக்கும் இடங்களுக்கெல்லாம் நேரிலே ஒரு சுற்றுப்பிரயாணம் பண்ணிக் காஞ்சிபுரத்தில் மாத்திரம் ஒரு பழம் பிரதிகண்டு அதனை வாங்கிவந்தேன். இவ்விரண்டோடும் ஒத்துப் பார்த்ததில் முன்பு அச்சிட்ட அவ்வளவும் மறுபடி திருத்தி அச்சிடவேண்டியதாயிற்று." இந்நூலையச்சிடற்குரிய செலவு றங்கூனிலிருக்கும் பிள்ளையவர்களது சகோதரன் இளைய தம்பிப்பிள்ளையவர்களாலும் அவர்களின் இஷ்டர் சிலராலும் கொடுக்கப்பட்டமையின், கி. பி. 1889ம் ஆண்டு கார்த்திகைத்திங்கள் சூளாமணியும் தன் ஒளியைத்தமிழகத்தே பரப்பத் தொடங்கிற்று. கார்த்திகையிற்றான் அண்ணாமலையிலும் அனற்பிழம்பு தோன்றியதென்பது புராணம். இம்மாதத்திற்றானே சூளாமணியும் வெளிவந்தது நற்சகுனம்போலும்.

(தொடரும்)


அவளுடைய வண்ணான் இப்பொழுது ஸன்லைட்டையே உபயோகிக்கிறான்

—துணிகளும் நீடித்தகாலம் உழைக்கின்றன



"இங்கே ஒரு அழுக்குத் துணிமூட்டை கிடக்கிறது. அவைகளை சலவை செய்தால் சீக்கிரம் கெட்டுப்போகும் என்று பயப்படுகிறேன். மேலும் வெளுப்பும் நன்றாகவே இருக்கிறதில்லை.

"நான் சொல்வதைக்கேள். உன் வண்ணானை ஸன்லைட் உபயோகிக்கும்படி சொல்லு. அச்சிறந்த ஸோப்பின் அபூர்வமான வெளுக்கும் தன்மையினால் துணிகள் துவைக்கப்படாமலே சுத்தமாகின்றன. துணிகள் கெடுவது துவைப்பதினாலேதான்.

ஒரு மாதத்திற்குப் பின்: இப்பொழுது உனது குழந்தைகள் சுத்தமாக காணப்படுகிறார்களே. நான் சொல்லியபடி ஸன்லைட்டின் சிறப்பை அறிந்தாய் போலும்.

"உண்மையே! நான் செய்ததைப் பற்றி மிகவும் சந்தோஷம். ஆடைகள் புதிதாகவும் சுத்தமாகவும் இருக்கின்றன. நீடித்த காலம் உழைப்பதால் ஸன்லைட் துணிகளைக் கெடுப்பதில்லை என்று அறிந்தேன்."

துணிகளைக் கெடுக்காமல் சலவைசெய்ய ஸன்லைட் ஸோப் ஒன்றினாலேதான் முடியும். வீட்டில் வெளுத்தாலும், வண்ணான் வெளுத்தாலும் உமது துணிகளுக்கு ஸன்லைட்டே உபயோகிக்கும்படி செய்யுங்கள். அதன் சிறந்த சலவை செய்யும் தன்மை சுலபமாக அழுக்கைப் போக்கடித்து, வெண்மை உடைகளுக்கு அதிக வெளுப்பும், சாய வஸ்திரங்களுக்கு ஒருவித புதிய பளபளப்பையும் கொடுக்கிறது.

உங்கள் வீட்டில் ஸன்லைட் எப்பொழுதும் இருக்கட்டும்.

அதன் உபயோகங்கள் பல உண்டு. அது இப்பொழுது மலிந்த விலையில் எங்கும் கிடைக்கும்.




SUNLIGHT SOAP

LEVER BROTHERS LIMITED, PORT SUNLIGHT, ENGLAND

I-S 1111-288A

TAMIL


தவத்தோர் என்பதை வேடத்தாலன்றி நடத்தையா லறியலாம்

நாடகப் பகுதி.

# தருமபுத்திரர் அல்லது துரோபதி துகில்

(மானிப்பாய். திரு. தா. சுவாமிநாதன் அவர்கள்.)

[உரிமை ஆக்கியோனுக்கே உரியது.]

அங்கம் 3. காட்சி 6.

இடம்:-விராடன்-அரண்மனை.

(விராடன், சுதக்கணை, கெங்கமுனி, விரதசாரணி, உத்தரை இருக்கின்றனர்.)

சுதக்கணை:—பிராணநாதா! மதலையாம் உத்தரனென்பான் வடபுறத்துமாடுபிடி அமரிற்றெவ்வரை எதிர்ப்பதற்காய்ப் பேடியாகிய பிருகந்நளை கூவிரஞ் செலுத்தப் போர்முனைக்குச் சென்றனன்.

விராடன்:—ஆ! என்னருங்காதற்குமரன் சமர்க்களஞ்சென்று யாதோபுரிகுவன்! சிறுவனன்றோ! அன்னவனுக்கு யாது நேர்ந்ததோ அறிகிலேன், அந்தோ! (மூர்ச்சையாகின்றனன்.)

கெங்கமுனி:—(சந்தனக் குழம்பைத்தடவி நறும்பனி நீரைப்பெய்து மூர்ச்சை தெளிவித்து) விராடபதி! மனங்கவலற்க. பொற்கொடிஞ்சியூர்ந்தான் அந்த மெய்ப்பேடியே யாகில் நினதுமைந்தன் இக்கணம் வென்றே வருவன்.

(ஒற்றன் வந்தனன்)

ஒற்றன்:—வேந்தர் வேந்தே! வீரத்தையுடைய உரககேதனன் போரிற்றோற்றனன். தங்கள் சிறுவனும் எமது இளவரசன் தன் ஒற்றைத்தேரைத் துணையாகக்கொண்டு போர்புரிந்து வென்று ஆனிரையையும் மீட்டனன்.

விராடன்:—(சோர்வும் துன்பமும் நீங்கி) இங்குள்ள தானைத்தலைவர் யாவரும் சென் றென்மகனை எதிர் கொண்டழைக்கப் பணிமின். எழுநிலை மாடங்களையுடைய பெரும்பதி வீதியெங்கும் புழுதியையடக்கிச் செபபொற் பூரணகும்பம் வைமின்; வாழையுங் கமுகும் காட்டுமின்; மணித்தீபங்களையேற்றுமின்; சுற்றிலும் விருதுக்கொடிகள் கட்டித்தோரணம் நாற்றிய தம்பங்கள் நாட்டுமின் என்று விரைவாய்ச்சென்று நகரமாந்தர்க்குக் கூறுமின்.

(ஒற்றன் ஓடினன் கெங்க முனியை விளித்து) முனிவ! எமது மதலையாமுத்தரன் வந்து சேருமளவும் நாமிருவரும் விளையாட்டாய்க் கழங்காடுவம் வருகுதி.

கெங்க:—அங்ஙனமே ஆகுக.

(சூதாடுகின்றனர். விராடன் ஒவ்வோர் முறையும் தோற்றனன்.)

விராடன்:—பெரும! வெற்றியையடைந்த என்மகன் உத்தரனுக்கு முன்னே மாற்றலர் தோற்றதுபோல இம்முறை ஆட்டத்தில் நீரும் தோல்வியே அடைவீர்.

கெங்க:—வேந்தே! சுயோதனன் வலியழிந்துடைந்துபோக வென்றவன் பேடியேயாவன். அன்றிச் சிறுவனாகிய நின் சேய் உடனடுங்காது அச்சமின்றிப்போரில எதிர்க்கும் வன்மையனோமோ! பிருகந்நளையெனும் பெயருடைப்பேடியைப் பேடிதானென்று மதிபற்க. அப்பேடிதான் முன்னொரு வேளையிற் காண்டவ வனத்தை எரித்த காளையாவன். நிகரில் வனப்புடை ஒற்றைக்கொடிஞ்சியை ஊர்ந்துசென்று போரில் பகைவராம் நிவாதகவசர் காலகேயரை வென்றவனுமவனே யென்றறிகுவை.

விராடன்:—அந்தணாள!

"கோடியின் கோடியான குருக்கடம் சேனைதன்னை, ஓடியென் புதல்வன்முனே யொருதனி பொருதுவென்று, நீடிய நிரையுமீட்டு மீண்டன னென்னநீயப்,பேடியை விறல்கொண்டாடிப்பேசுதி, பிரமமூர்த்தி!

புன்னவையானமாற்றம் புகன்றனரெனினுங் கேட்டாங், கின்னவை நன்றுநன்றென் றிதம்பட மொழிவதல்லால், மன்னவை யிருந்துநாளும் வழிபடு மாந்தர் மன்னர், சொன்னவை மறுத்துமாறு சொல்வரோ? சுருதிவல்லாய்!"

என்குமரன் விரைந்து சென்று மாகோடிக் கணக்கான கௌரவரின் சேனையைத் தனியே போர் செய்து வென்று மிகுதியாம் ஆனிரையையுமீட்டுத் திரும்பினனென்றும் யான் பகர, முனி சிரேட்ட! நீர் அப்பேடியை விறல்கொண்டாடிப் பேசுவீர். சுருதி வல்லாய்! வேத்தவையிலிருந்து நாடோறும் அரசரைச் சேவித்து வாழ்பவர், அவ்வரசர் இழிந்தகுற்றமாகிய கூற்றுகள் மொழிந்தாராயினும், அவற்றைச் செவியேற்று ஆங்கு இவை தகுந்தகுமென இதம்படக் கூறுவதன்றி, அவ்வரசர் வார்த்தையை மறுத்து மாறுன வார்த்தையும் செப்புவாரா? "இகழி னிகழ்ந்தாங் கிறைமகனென்று, புகழினு மொக்கப் புகழ்ப—இகன் மன்னன், சீர்வழிப் பட்டதே மன்பதை" என்னும் ஆன்றோர் வாக்கியத்தையும் அறிவீரன்றோ!

கெங்க:-விராடநன்மன்னவா! கவசகுண்டலன், வின்னூலாளன், அசுவத்தாமன், கங்கைதனயன் முதலாயினரை நின்தனயன் வெற்றி பெறத் தகுந்த வல்லவனோ! நின்மகன் வந்து கூறின், அதன் பின்னர் நீ பீடுடைப் பேடியை அறிகுவை.

விராடன்:-(வெகுண்டு) எனது மைந்தன் வெற்றியை யடையவும் சிறிதேனும் நடுவுநிலையின்றி உண்மைக்கு மாறுய்ப் பல்கானீர் பேசுவதென்!

(கவற்றால் முனிவரின் நுதற்கண் எறிந்தனன். நுதலுங்குருதியைச் சொரிந்தது.)

விரத:-(குருதியைக்கண்டு மருண்டு) அந்தோ! இம்மண்டலமகிபன் சுற்றமும், கீர்த்தியும், அரசவாழ்க்கையும, இந்நகரமும் இற்றைஞான்றே அழிந்தேதவிடும் போலிருக்கின்றதே. எம் தலைவரின் நெற்றியிற்சோரி கக்குவதை மற்றையபதிகள் காண்பரேல் என்னவாய் முடியுமோ!

(குருதியை முன்றானையாலொற்றிக் கண்ணீர் பெருக்கினள்.)

விராடன்:- ஆ, அரிவையர்க்குரிய நாற்குணங்களையும் இயல்பாகக் கொண்ட இவ்வண்ணமகள், அற்பமும் கூச்சமின்றி, இவ்வாடவன் நுதலிற் பெருகிய குருதியைச் சென்றொற்றியதன்மையால், இருவரும் ஏதோ நெருங்கிய தமராயிருததல்வேண்டும். இம மங்கை நல்லாளின் விழியினின்றும் சொரிகின்ற நீரே இருவர்க்குமுள்ள தொடர்பை விளக்காநிற்கும. ஒருவரிடத்துவைத்த பேரன்பை அவர்மாட்டு அன்புடையாரது கண்ணீரே காட்டிவிடு மென்பதை விளக்குவான் பொருட்டுத் தேவர் திப்பிய மொழியாம்,

"அன்பிற்கு முண்டோ வடைக்குந்தா ழார்வலர், புன்கணீர் பூச றரும்"

என்ற குறள்வெண்பா நிலவுகின்றது. இவள்மாட்டுத் தோன்றிய விழிநீர், தலையாயவன்பின் பெருக்கால் வெளிப்படும் உள்ள நெகிழ்ச்சியை வெளிப் படுத்துகின்றது. நிற்க, யான் எற்றிய கருவியால் இத்துணை இடையூறுவருமென் றெண்ணிலன். நினைத்ததொன்று; நிகழ்ந்தது பிறிதொன்றாக முடிந்ததே. அந்தோ! இதற்குக் காரணமாய கோபமே கொடிது. (உத்தரன் வந்து தந்தையை வணங்கினன்.) மைந்த! வாகையையணிந்துவந்தனே. மனமிக மகிழ்ந்தனன். (தொடரும்)

கதைப் பகுதி

# மிருத சஞ்சீவினி

"துகிலிகை"

## I. காதல் வியாதி

இந்திரனும் சந்திரனும் வனப்பெழுதிய இரண்டு கதிரைகளில் வீற்றிருக்கின்றார்கள். வாசலின் இருமருங்கிலும் யாம் இம்மண்ணுலகப் பெண்களோடு ஒப்பிட்டுரைக்கத் தன்மையுடையோமல்லோம்; வானதினின்றும் தற்செயலாய் வழுக்கி வீழ்ந்த கந்தர்வ கன்னிகைகள்" என்னும் எண்ணத்தால் வீங்கிய முகத்துடன் அணிவன அணிபெற அணிந்தும், புனைவன திறம்படப் புனைந்தும் நிற்கின்றார்கள் பெண்களிருவர். இவர்கள் இங்ஙனம் நிற்பதனால் அவ்விடத்தைக் காமன்கோவில் என்று எண்ணிவிடாதீர்கள். அஃது ஒரு நோயாளியின் படுக்கையறை. இந்திரனும் சந்திரனும் பெயர்பெற்ற மருத்துவர்களல்லர்; அவர்கள் அந்நோயாளியின் சகோதரர்கள். வாசலில் நிற்கும் இரதிதேவியின் புதல்வியர்கள் அவர்களின் மனைவிமார். நோயாளியாகிய பெண்மணி ஒருகட்டிலில் படுத்திருக்கிறாள். அவள் இறுகமூடிய கண்களுடன் கிடக்கும் காட்சி அவளுக்கும் இயமனுக்கு மிடையில் தொலைவிலுணர்தல் நிகழ்கின்றதோ என்னும் ஐயத்தை உண்டாக்கும். அவள் படுக்கையின் அருகே ஒரு சிறு ஆசனம். அதில் ஒரு வைத்தியர். அழகிய நந்தனவனத்தின் நடுவண் இக்காலச் சிற்பவேலைக்கோர் இலக்கியம் எனத் திகழும் அம்மூன்றடுக்கு வீட்டைக்கண்டோர், அங்குள்ளவேலையாளுக்குத் தலைநோவு வந்தாலும் மாகாண மருத்துவத் தலைவரே வரவழைக்கப் படுவார் என எண்ணத்தவறார். அங்கிருப்பவர் தலைமை வைத்தியருமல்லர். அவருழையருமல்லர். அவர் அக்கிராமவைத்தியருள் ஒருவராகிய வடிவேலு என்பவர்., அவர் வாகடம் கற்றறியாச் சித்த ஆயுர்வேத வைத்தியர். இரத்தாசயம் எங்கிருக்கின்றது "என்னும் வினவுக்கு, அஃது கொப்புழின் கீழே" என விடையிறுக்கும் மருத்துவ ஞாயிறு. அவர் ஒருஏழை பங்காளன் வறுமையால் வாடும் மக்கள் பிணியால் நலியுங்காலம் இப்பெருமகன் அவர்கள்மீது மிஞ்சிய அளிசெய்து இத்துன்ப உலகிற் கிடந்து நெடுநாள் வருந்த நெஞ்சு பொறாதவராய் அவர்களை நமனூர் நாட்டுக்கு அனுப்புவர். தான் இயமதர்மராஜனின் அன்பிற்குகந்த பிரதிநிதி என்னும் செருக்கும் அவருக்கில்லாமலில்லை. ஐந்து ஆறு நாட்களாக அவரே அந்நோயாளிக்கு மருத்துவராக விருந்து வருகின்றார். இந்திரன், சந்திரன் என்பவர்கள் வருந்திக்கேட்பதனால் அவர் அங்குவந்து பணம் பெற்றுப் போகின்றாரெனினும், அவர் அரிதின் முடித்து வைத்திருக்கும் மருந்துகள் நோயாளியின் வாய்க்குள் ஒருமுறையாவது செல்லப் பாக்கியம்செய்யவில்லை. அவள் வாய் நோயாற் பூட்டப்பட்டுவிட்டதோ எனக் காரணங் கற்பிக்கவேண்டாம். பொருளின் மிக்க அந்நோயாளி துயர்க்கடலுள் குளித்தபடியேனும் சிலநாள் உலகிடைவாழப்பெரிதும் விரும்பிப் பல்லாயிரக் கணக்காகப் பணங்கொடுத்து உண்ட மருந்தோ அளவிலடங்கா. புகழ்பெற்ற மருத்துவர்கள் யாவரிடமும் அவள் மருந்துண்டிருக்கிறாள். எல்லா வைத்தியர்களும் நோய்நாடி மருந்து கொடுத்தார்கள். ஆனால் நோய் முதல்நாடிக் கொடுக்கவில்லை. இப்போது அவள் செயலற்றுப்படுக்கையில்வீழ்ந்தபின்னர் வடிவேலுவை வைத்தியராக நியமித்தார்கள். அவள் சகோதரர்கள் வடிவேலுவின் மருந்துகளின் குணத்தை நன்கறிந்ததும் மெல்லியலாள் இனி மருந்துண்ண முடியாதென்று மறுத்துவிட்டாள். அவர் இன்று நோயாளியைப் பார்க்க வந்து ஒருமணி நேரமாயும் நாடிப் பரீட்சை செய்யாதவராய் தன் மருந்துகளின் திறமையையும், அம்மருந்துமுறைகள் தனக்குக்கிடைத்த வரலாற்றையும் பேசிக்கொண்டே யிருக்கின்றார். நோயாளிடைப் பார்க்க அயலகத்தவர் சிலரும் வந்து சேர்ந்தனர். வைத்தியரின் விரிவுரையும் வளர்ந்து கொண்டேவந்தது. மணி மூன்றாயிற்று பரிகாரி பொன்னருக்கு ஆளனுப்பியுள்ளேன், இன்னும் அரைமணி நேரத்தில் வந்துவிடுவார் என்றான் சந்திரன்.

"ஓகோ! அப்படியா! இதுவரையேன் எனக்குச்சொல்லத் தவறினீர்கள் என்றார் ஆனந்தம். நமது தேய மருத்துவர்களுள் அவர் கொஞ்சம் திறமையுள்ளவர்தான்" என அகமொன்று வைத்துப் புறமொன்று கூறினார் வடிவேலு.

இரண்டு நாய்கள் ஓரிடத்தில் சந்தித்தால் சண்டை நிச்சயம். மருத்துவர்களின் பெயர் கேட்டால் வடிவேலுவுக்குப் பொறாமை பொங்குவது நிச்சயம்.

"இந்த வயதுக்குள் நான் கண்டுரையாடிய வைத்தியர்களோ பலர், அவர்களிற் சிலர் புகழ்பெற்று விளங்குவது வெளிமயக்காலன்றி மற்றெதனாலுமன்று. சுன்னாகம் அருணாசல வைத்தியரின் மருந்துகள் யாவும் வெறும்போலி: அவற்றில் சத்துக்கிடையாது. சுளிபுரம் முருகப்பரின் மருந்துகள் அமுதச் சத்தற்றவை: யாவும் நச்சுமருந்துகள். தங்க ஏலாதி, கஸ்தூரி மிர்த்தியாதி, இரத்தின பூபதி முதலியன கொடுக்கும் நோய்களுக்கு அவர் வெற்றிவேலாயுதம் முதலியவற்றைக் கொடுத்து நோயாளியை விண்ணுலகனுப்பியதை யான் கண்ணாரக் கண்டுள்ளேன். மானிப்பாய் மருத்துவர் மாரிமுத்தரிடம் நல்லமருந்துகள் உண்டு. தற்செயலாக எனக்கு மருந்துகள் வேண்டுமானுல் அவரிடமே வாங்கிக்கொள்வேன். வேறொருவர் மருந்தைக் கடைக்கண்ணாலும் பாரேன். அவரிடமும் ஒரு பெருங் குறையுண்டு நோய் நிதானிக்கும் திறமையைக் கடவுள் அவருக்குக் கொடுக்கவில்லை. நோயை நிதானிப்பதில் பரிகாரி பொன்னரையும் திறமையுடையவர் எனச் சொல்லமுடியாது. எத்தனையோ நோயாளிகளின் முன்னர் நானும் அவரும் சந்தித்திருக்கின்றோம். ஓரிடத்திலாவது என் உதவியும் திருத்தமும் இன்றி அவர் நோயைச் சரியாய் நிதானித்ததுகிடையாது. வாகட அறிவு என்பது ஒருவருக்கும் கிடையாது. "சுட்டுப் போடு புத்தகந்தன்னையே" என்னும் பாட்டுத் துண்டுக்குப் பொருள் சொல்லமுடியுமா என யான் கேளாத வைத்தியருமில்லை. ஒருவராவது முன் வந்து பொருள் சொன்னதுமில்லை. என வடிவேலுவைத்தியர் தொடர்ந்து சொற்பொழிவு செய்தார்.

(தொடரும்)

மழித்தலு நீட்டலும் வேண்டா வுலகம், பழித்த தொழித்து விடின்.

## Notice of Sale

### கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டு 8948-ம் இலக்க வழக்கில் 1936-ம் ஆண்டு சித்திரை மாதம் 7-ந் திகதியைக்கொண்ட கோட்டுக் கட்டளைப்படி கீழே விபரிக்கப்பட்டிருக்கும் ஆதனம் 1936-ம் ஆண்டு வைகாசி மாதம் 9-ந் திகதி சனிக்கிழமை முற்பகல் 8–30 மணிவரையில் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### விபரம்

புலோலிமேற்கு
கணபதிப்பிள்ளை கந்தையா
வழக்காளி

புலோலிகிழக்கு
வயிரவியார் கந்தையா
எதிராளி

### ஆதனம்

புலோலி மேற்கு சிங்கபாகுதேவன் குறிச்சியிறை துலாவட்டை. நிலப்பரப்பு $6\frac{5}{8}$ வீடு $\frac{1}{4}$. இதில் கிழக்கரைவாசியில் வடக்கரைவாசிக்கு நிலப்பரப்பு 1 குளி $13\frac{5}{6}$ இதில் தெற்கரைவாசிக்கு குளி $15\frac{21}{32}$. எல்லை: கிழக்கு ரோட்டு- வடக்கு முத்துச்சாமி பெண் இரத்தினத்துக்குடையதும் இதற்கு அடுத்ததுமான வடக்கரைவாசிக்காணி. மேற்கு வல்லிபுரம்பெண் சிவகாமிக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். தெற்கு வேலுப்பிள்ளை பெண் சின்னாச்சிக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். இவ்வெல்லைக்குட்பட்ட நிலம் பனைகள் இலந்தைகள் முழுவதும் மேற்கெல்லையிலிருக்கும கிணற்றில் அரைவாசியும்.

புலோலிகிழக்கு பருத்தித்துறை 8-4-36. } S. C. Kanagasabai கொம்மிஷனர்

(111) 19-4-36.



### சுத்தமான கதர்ப்புடவைகள்.

திருப்பூர் சுயம்கதர் வேஷ்டிகள், சால்வைகள், துண்டுகள், ஷேட் துணிகள் முன்னிலும் பார்க்கச் சகாயமான விலைக்குக் கிடைக்கும்.

ஆ. சு. வேதாரணியம்பிள்ளை,
புடவை வியாபாரம்,
பெரியதெரு, சுன்னாகம்.

(50) 1-12-35×12-36.



### விளம்பரம்

கதிரமலையி லுறைகின்ற கதிர்வேலே! நினது திருவடி அடையவருகின்ற பக்தகோடிகளுக்குத்தொண்டு புரிவதற்காக விடையளித்தாய். 1927-ம் ௵ மாணிக்ககங்கையி லிருந்து கதிரமலைசிகரம்வரை ரோட்டைத் திறக்க கதிர் வேலே! நீ நல்லோர்மனதில் நடனம் புரிந்து பணம்கொடுப்பித்த கருணையால் முற்றுப்பெற நெருங்கிவிட்டது. அன்றுதொடக்கம் நின்னைப்பின்பற்றி வரும் பக்தகோடிகள் தாகசாந்தி செய்தற் பொருட்டு கதிரமலைச் சிகரத்தே தண்ணீர்ப்பந்தலை அமைப்பித்தாய். பின்பு ஆங்கோர் திருக்குள மமைக்கும் பொருட்டும் விடைதந்தாய். அத்திருக்குளத் திருப்பணியை நடப்பிக்க யாழ்ப்பாணவாசிகளிற் சிலர் ஊக்கத்தைத் தருவித்து கார்த்திகை மாசம் துவக்கம இதுவரையில் வேலை நடப்பித்து, பணவசதிக் குறைவினாலும் ஒருவரும் பணந்தராதபடியாலும் வேலையை நிறுத்த உத்தேசித்திருக்கிறேன். பொருட்பாக்கிய முள்ள தனவந்தர்களாகிலும் கதிர்வேலே ஈகின்றாரில்லை. ஈந்தால் இவ்வருஷ முடிவிற்குள் நிறைவேற்றத் திட முண்டு.

இதற்குப் பணமனுப்பும் விலாசம்:

ரமணசங்குசாது,
திசைமாறு போஸ்ட்.

(8) 9-2-36–12-4-36


### சுழல்காற்று விபத்து

### 225 பேர் மரணம்

மிஸிஸிப்பி பிரதேசத்தில் சுழல்காற்று ஏற்பட்டு 125 பேர்வரையில் இறந்ததாகத் தெரிகிறது.

1000 இன்ஜின்கள் சப்திப்பது போல் இரைச்சலுடன் தோன்றிய சுழற்காற்றுக் காரணமாக கெயின்ஸ்வில்லியில் 100 பேர் இறந்ததாக அட்லாண்டாவிலிருந்து வந்த செய்தியொன்று கூறுகிறது.

### தாமதமின்றித் தண்டியுங்கள்

மருதானையைச் சேர்ந்த பொடிசிங்கோ என்பவன் தனது மனைவியைக் கொலைசெய்தான் என்று கொழும்புப் பொலிஸ்கோட்டில் குற்றம சாட்டப்பட்டான். அவன் நீதிபதியைப் பார்த்து "ஐயா! நான் வெட்டியது உண்மைதான்; எனவே என்னைக் காலதாமதமின்றித் தண்டியுங்கள்" என்று கூறினான்.


## மருந்துச் சரக்குகளின் விளம்பரம்

இத்தாற் சகல வைத்தியர்க்கும், மருந்துச்சரக்கு வியாபாரிகட்கும் தெரிவிப்பதாவது:—இப்போது பெரியகடை மார்க்கட்டுக்கு வடக்குப் பக்கத்திலிருக்கும் சே. சிவக்கொழுந்து அவர்களின் மருந்துச்சரக்குக் கடையிலும், நல்லூர்வடக்குச் சட்டநாதர் கோயிலடியிலிருக்கும் மேற்படியாரின் மருந்துச் சரக்குக் கடையிலும், கஸ்தூரி, கோரோசனை, குங்குமப்பூ, காண்டாமிருகக் கொம்பு. சுத்தமான சிப்பி முத்தும் அடியிற் குறிப்பிட்டிருக்கும் விலைக்குப் பெற்றுக் கொள்ளலாம்

| | களஞ்சு ஒன்றுக்கு | தோலா ஒன்றுக்கு |
|---|---|---|
| 1-ம் நம். கஸ்தூரி | 20—00 | 40—00 |
| ,, கோரோசனை | 3—00 | 7—00 |
| ,, குங்குமப்பூ | 50 | 1—20 |
| ,, முத்து | 14—00 | 32—50 |

1-ம் நம். காண்டாமிருகக்கோம்பு களஞ்சு ஒன்றுக்கு சதம் 50.
றாத்தல் ஒன்றுக்கு ரூபா 40.

மேலே சொல்லப்பட்ட சரக்குகள் எல்லாம் முதல்தரமான நல்லசரக்குகளே, எங்களிடம் நேரில்வந்து பார்த்துக்கொள்ளலாம். இன்னும் சுருள் தங்கம், புனுகு, பச்சைக் கற்பூரம் ஜவ்வாது, அரைத்த சந்தனம், சந்தனக்கட்டை, சந்தனவில்லை, சாம்பிராணிப் பதங்கம், தைலம், முதலியவைகளும், சென்ற், அத்தர் முதலிய வாசனைத் திரவியங்களும், திறமான பன்னீர்வகைகளும், அபிஷேகத்திரவியங்களும், ஓமவாட்டர், சுருட்டுக்கோடாச் சரக்குவகைகளும் பலவிதமான திறம் ஊதிவத்திவகைகளும், மற்றும் மருந்துச் சரக்குவகைகளும் தொகைக்கும் சில்லறைக்கும் சரசமான விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

தஞ்சாவூர், மு. ஆபிரகாம் பண்டிதர் அவர்களின் சஞ்சீவி மருந்து வகைகளும்; திருச்சி, டக்டர் A. மதுரம் அவர்களின் குரு மருந்து வகைகளும்; யாழ்ப்பாணம், டக்டர் ஜே. வஸ்தியாம்பிள்ளை அவர்களின் மருந்துவகைகளும் இவ்விடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

வி. பி. மூலம் பெற விரும்புவோர், நான்கிலொருபாகத்தை முற்பணமாக அனுப்பவேண்டும். தொடுவாய்ப்பகுதிகளுக்கு முழுவதும் முற்பணமே அனுப்பவேண்டும்.

தபால், மனிஆடர் அனுப்பும் விலாசம்:

ஆ. இராசையா,
சே. சிவக்கொழுந்து அவர்களின் மருந்துச்சரக்குக் கடை
பெரியகடைத்தெரு, யாழ்ப்பாணம்.

(59) 29-12-35—12.



## சலாமிசிரி லேகியம்.

இந்த லேகியத்தை நான் அனேக பிரபுக்களுக்குச் செய்துகொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்தியதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையும் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனால் உண்டாகும் சுகத்தை அடையும்படி பொதுநலத்தைக் கருதியே இப்போது இதைப்பற்றி விளம்பரப்படுத்தினோம்

இது சலாமிசிரி, குங்குமப்பூ, சிலாஜித, கஸ்தூரி, குமாஸ்தாக, பீதானுசாலாமுஸ்லி, சப்தேமுத்ஸ்லி, பிஸ்தாஸ், சாரப்பருப்பு, பாதம்பருப்பு. சாத்தாவானி, நீர்முள்ளி விதை, நாகம்பூ, வங்கபஸ்பம், அப்ரக்பஸ்பம், பவளபஸ்பம், வெள்ளி பஸ்பம், அயக்காந்த செந்தூரம். சாம்பிராணி பதங்கம் இன்னும் அநேக புஷ்டியான மூலிகைகள் சேர்த்துச் செய்யப்பெற்றிருக்கின்றது.

இதனால் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, ஒரு வருஷத்துள் உண்டாயிருக்கும் பக்கவாய்வு, இருமல், காசம், பித்தகாமாலை, பித்தபாண்டு, பீனிசம், கைகால் காந்தல் வலி, இடுப்புவலி, பக்கவாய்வு இன்னும் அநேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டுவந்தால் மேற்சொல்லிய வியாதிகள் சுகமடைவதுடன் சூதகவாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள் தீர்ந்து தேகபுஷ்டியும் பலமும் பெறுவார்கள். பால் விருத்தியாகும்.

இதன் விலை ராத்தல் ஒன்றுக்கு ரூபா 20. அரை ராத்தல் ரூபா 10. கால் ராத்தல் ரூபா 5. தபாற்செலவு வேறு.

சிங்கப்பூர், பினங்கு முதலிய தொடுவாய் ராச்சியப்பகுதிக்கு வி. பி. சட்டம் இல்லாததினால் முன் மனியாடர் அனுப்புதல் வேண்டும்.

க. ஆறுமுகம்பிள்ளை,
சிவஞான ஆரோக்கிய சுகாதார வைத்தியசாலை
காத்தான்குடி போஸ்ட், மட்டக்களப்பு, சிலோன்.
Kattankudi P. O. Batticaloa, Ceylon.

(105) 5-4-36-8




## M. M. L. Mohamed Abdul Cader Hadjiar & Bro.

GENERAL HARDWARE STORE
Grand Bazaar, JFFNA.

THE BEST IN THE MARKET

KEY BRAND GERMAN CEMENT




துறப்பு மார்க் ஜெர்மன் சீமேந்து

MADE IN GERMANY

இந்த துறப்பு மார்க் ஜெர்மன் சீமேந்து மற்ற எல்லாவித சீமேந்துகட்கும் மேலானதும், அளவு கூடியதும், நல்ல பசையுள்ளதும், நற்சாட்சிப்பத்திரம் பெற்று உலக முழுவதும் அதிக விருப்பத்துடன் வாங்கிப் பாவிப்பதுமான சீமேந்தும் இதுவே. இந்த துறப்புமார்க்கு சீமேந்தையே உங்கள் தேவைகளுக்கு வாங்கிப் பாவியுங்கள். ஒருமுறை பரீட்சித்துப் பார்த்தால் உண்மை விளங்கும்.

(95) 8-3-36

Registered as a Newspaper. 12 Pages

# "The EELAKESARI"

THE LEADING NATIONALIST TAMIL WEEKLY OF CEYLON

LARGEST CIRCULATION GUARANTEED — BEST MEDIUM FOR ADVERTISEMENT

Vol. 6 } Chunnakam, Jaffna, 19th April 1936, Sunday. { No. 39

அகில இலங்கை

## ஆதாய சமுதாயம்

மாதமொன்றுக்கு ரூபாய் 2 வீதம் 100 மாதங்களுக்குச் செலுத்தி ரூபாய் 275 பெறமுன் வாருங்கள்.

கமம், வியாபாரம் ஆதிய வற்றுக்கு முதல்பெற விரும்பினல் மேற்படி சமுதாயத்தில் வந்து ஏலவே சேர்ந்து கொள்ளுங்கள். வேலையில்லாத் திண்டாட்டத்தை யொழிக்க எமது சமுதாயத்தை யாதரியுங்கள்.

எம் தேசப்பணத்தை எம் தேச சமுதாயங்களில் செலுத்தி செல்வப்பேற்றை யடைய முன்வாருங்கள். வருடமொன்றுக்கு ரூபாய் 24 செலுத்தி அங்கத்தவம் பெறுவோருக்கு இலகுவான முறையில் இறுக்கக் கூடிய கடன்கள் குறைந்த வட்டிக்குக் கொடுக்கின்றோம்.

உயர்ந்த வட்டி விகிதத்தில் தவணைவைப்பு, நடைவைப்பு, சம்பாத்திய வைப்புகளுக்கு பணம் ஏற்றுக் கொள்வோம். அங்கத்தவம்பெற விரைந்து வாருங்கள். காலதாமதமடைந்து மனம் வருந்தாதீர்கள். வேண்டிய விபரங்களுக்குக் கீழ்க் கண்ட விலாசத்துக்கு எழுதி அறிக.

Manager

**LANKA BENEFIT CO.,**

Vannarponnai

(175) 5-8-34.

திருநெல்வேலி ஒற்றுமைநிதி

(வரையறுத்து)

அதிகாரம்பெற்ற மூலதனம் ரூ. 50,00,000

ஒரு பங்கு 25 சதமாக எண்பது மாதங்கள் செலுத்தி ரூ. 25ம் ஆதாயமும் பெறலாம்.

தனிக்கத்தொழிலும் உணவுப்பொருள் வியாபாரமும் திருநெல்வேலியில் இலாபகரமாய் நடக்கின்றது.

வேண்டிய இடங்களில் கிளை ஸ்தாபனங்கள் திறக்கப்பெறும்

தேசியகருமங்களை வளர்ப்பதால்மாத்திரம் சுயேச்சை பெறமுடியும் ஆதலால்

முதலைவளர்த்து, வேலையளித்து, கைத்தொழிலை உயிர்ப்பிக்கும் **நோக்கமுடைய இந்நிதியை ஆதரியுங்கள்.**

இலகுவானமுறையில் இறுக்கக்கூடிய கடன்கள்கொடுக்கிறோம் உயர்ந்த வட்டிவிகிதத்தில், தவணைக்கும் நிபந்தமாயும் சம்பாத்தியத்திலும், நடைக்கணக்கிலும் பணம் ஏற்றுக்கொள்ளுவோம்.

**பங்குகளுக்கு முந்துங்கள்**

கைராட்டினத்தில் நூற்ற நூலும், கைத்தொழில் பொருட்களும் சந்தாவுக்கு ஏற்றுக்கொள்ளப்படும்.

வ. சோமசுந்தரம், காரியாதிகாரி

(30) 18-11-34—11-35.

விலை நிதானம்! நயம் சரக்கு!

## எங்கே?

யாழ்ப்பாணம் பெரியகடை

தெங்காசத்திரத்திற்கு மேற்குப்பக்கமாய் இருக்கும்

**மு குமாரசாமிப்பிள்ளை கடையில்**

நெல், அரிசி முதலிய தானியவகைகளும், கறிசரக்குவகைகளும், நூல், வாளியும் பலவிதமான சாயப்புச்சாமான்களும் விலை நிதானமாயும் நயம் சரக்காயும் கிடைக்கும்.

கொழும்பு - வெள்ளவத்தை 2, 4, 6, 8, 10, 20-ம் நம்பர் நூல் தொகையாகவும் சில்லறையாகவும் யாழ்ப்பாணம் இரகுநாதையர் பஞ்சாங்கம் தொகையாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.


மு. குமாரசாமிப்பிள்ளை,

பெரியகடை, யாழ்ப்பாணம்.

(2?) 19-2-34

## பவுண்மார்க் ஓடுகள்

இப்பொழுதும் விசேடமாக மதிப்புப்பெறும் பவுண்மார்க் ஓடுகள் இவைகளே.



எப்பொழுதும் தங்கு மதிப்புடன் அழகு மிளிரும் உன்னத மாளிகைகளில் வேயப்பெற்றவை.

இலங்கை இந்தியா முதலிய கீழைத்தேசங்களில் அனலுக்கும் குளிருக்கும் நலனுக்கும் பெலனுக்கும் பாவனைக்கும் மாதிரிக்கும் ஏற்புடைத்தாய், அழகும் அழுத்தமும் படிவும் மலிவும் மிருதுவும் மேன்மையுமுள்ளதெனப் பரீட்சித்த பலர் கண்ட சிறப்பும் தீர்க்கமுமுள்ள ஓடுகள் இவைகளே.

பவுண்மார்க் ஓடுகளெனச் சொல்லி மற்றைய ஓடுகளைக் காட்டும் போதும் சில பவுண்மார்க் ஓடுகளை இடையிடையே குறிப்பாக வைத்திருந்து எடுத்துக் காட்டித் தமது ஓடுகளை விற்பவரிடமும் கவனமாயிருக்கவும். பவுண்மார்க் ஓடுகளின் ஏசண்டுகள் நாங்களே.

இங்ஙனம்

**சி. வீரகத்திப்பிள்ளை அன்டு சன்ஸ்**

(இவை விற்குமிடங்கள்)

யாழ்ப்பாணம் { பெரியகடை, பறங்கித்தெரு } சி. வீரகத்திப்பிள்ளை அன் சன்ஸ்

பருத்தித்துறை ....

வல்வெட்டித்துறை

காங்கேயன்துறை

காரைநகர் .... .... சி. க. ஆறுமுகம்பிள்ளை

ஊர்காவற்றுறை .... பி. ம. தம்பிஐயா அன் சன்ஸ்

(103) 23-9-34.

# Sri Lanka Book Depot

## ஸ்ரீ லங்கா புத்தகசாலை

வண்ணார்பண்ணை

ஐயன்மீர்!

யாழ்ப்பாணம் - வண்ணார்பண்ணை, கதிரேசன் கோவிலுக்கு வடக்குப்பக்கமாகவிருக்கும் ஸ்ரீ லங்கா புத்தகசாலையில் பள்ளிக்கூடங்களுக்குத் தேவையான தமிழ், இங்கிலீஷ் புத்தகங்களும், ஆசிரிய, பாலபண்டித, பண்டித வகுப்புகளுக்குரிய இலக்கிய, இலக்கண, இதிகாச, புராண நூல்களும், வேறு இலங்கை இந்திய பதிப்புகளும் பென்சில், பேனா முதலியனவும், கொப்பி (Ex. Copy) கணக்குப்புஸ்தகங்கள், அச்சுக்கூடங்களுக்குத் தேவையான எல்லாவகையான கடதாசிகளும் சகாயமான விலைக்கு தொகையாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

வியாபாரிகளுக்கும் ஆசிரியர்களுக்கும் தக்க கழிவு கொடுக்கப்படும் ஒருமுறை பரீட்சித்துப்பாருங்கள்

அதிபர், ஸ்ரீலங்கா புத்தகசாலை

வண்ணார்பண்ணை.

(36) 6-10-35

இப்பத்திரிகை, யாழ்ப்பாணம்-பலிகிட்டிதெற்கு "திருமகள் நிலய" க்கிலிருக்கும் நா. பொன்னையா என்பவரால், சுன்னாகம் "தலையாட்டி"யி லுள்ள திருமகள் அச்சியந்திரசாலையில் 1936-ம் ஆண்டு ஏப்ரில் மீ 19-ந் உ ஞாயிற்றுக்கிழமை அச்சிடுவிக்கப்பெற்று வெளியிடப்பட்டது.